Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை (04.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 035

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் கனமழை பொழிய வாய்ப்பு

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வட, கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள வளிமண்டலக் குழப்பம் காரணமாகவும், தென்கிழக்கு வங்காள விரிகுடாப் பகுதியில் ஏற்பட்டுள்ள ஒரு தாழமுக்க பிரதேசம் காரணமாகவும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை அதிகமாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமாக வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் பல பகுதிகளில் இவ்வாறு மழை பொழிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சில பகுதிகளில் 150 மில்லி 19 ஆம் பக்கம் பார்க்க

## மண் சரிவு அனர்த்தம் சேதவிபரம் குறித்து சர்ச்சை

### நிலைமையை விபரிக்கிறார் அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

மண் சரிவு அனர்த்தத்தால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் உட்பட சேத விபரங்கள் தொடர்பாக முன்னுக்குப் பின் முரண்பாடான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர உண்மையான கள நிலைவரத்தை புள்ளிவிபரங்களுடன் விபரித்துக் கூறியுள்ளார்.

ஹல்துமல்ல கொஸ்லாந்தை மீரியாபெத்தவில் இடம்பெற்ற பாரிய மண் சரிவில் 31 பேரை மட்டுமே காணவில்லை என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க

# மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் மீது குற்றச்சாட்டு

- ❖ பூட்டிக்கிடக்கிறது முதல்வர் அலுவலகம்
- ❖ தொலைபேசி அழைப்புக்கு பொறுப்பற்ற பதில்
- ❖ கடிதங்களுக்கு பதில் இல்லை




வடக்கு மாகாண முதலமைச்சர் மீது ஆளும்கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

மாகாண முதலமைச்சரினதும் அவரின் கீழுள்ள அமைச்சர்களினதும் செயற்பாடுகளினால் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியவி ல்லை என்பதுடன் அவர்கள் மக்களின் வெறுப்புக்குள்ளாகி வருகின்றனர்.

கடந்த ஒரு வருட கால முதலமைச்சரின் செயற்பாடுகளால் மாகாணசபை நிர்வாகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இவ்வாறு அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முதலமைச்சர் மீது ஆளும்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களான அன்ரனி ஜெயநாதன் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் முன்வைத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு முதலமைச்சர் சட்ட அறிஞர், அவரின் கீழ் பெருந்தொகையான சட்டத்தரணிகள் இருக்கிறார்கள் என முதலமைச்சரை எமக்கு அறிமுகம் செய்தனர். அதை நாமும் நம்பினோம். 19 ஆம் பக்கம் பார்க்க

## மேலும் மூன்று சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

கொஸ்லாந்தை மீரியபெத்த தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி காணாமற்போன மேலும் மூவரின் சடலங்களை பாதுகாப்பு பிரிவினர் நேற்று மீட்டுள்ளனர்.

மீரியபெத்த பகுதியில் காணாமற் போனோரை தேடும் நடவடிக்கைகள் நேற்று ஆறாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

19 ஆம் பக்கம் பார்க்க


## புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்காக எவரும் கவலைப்படத் தேவையில்லை

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின்போது புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்காக எவரும் கவலைப்படத் தேவையில்லை என்று இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ரான்கீன் சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மத ஐக்கியம் மற்றும் இலங்கையின் ஏனைய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



இலங்கையில் மத நல்லிணக்கம் அவசியமானது என்ற பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டையே அஸ்கிரி, மல்வத்து பீடாதிபதிகளும் கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அளுத்கமவில் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவத்தை பாடமாகக் கொண்டு செயற்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

குரோதத்தை தூண்டக்கூடிய பேச்சுக்களை 19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவி புறப்படும் நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து காலையில் கொழும்பு நோக்கி புறப்படும் யாழ்தேவி புகையிரதத்தின் பயண நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை காலை 7.25 மணிக்கு புறப்பட்ட புகையிரதம் இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து காலை 7.10 மணிக்கு புறப்படும் என புகையிரத நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்த நேரமாற்ற ஒழுங்குபளை புகையிரத நிலையத்திற்கும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கும் இடையில் சிறு மாற்றம் ஏற்படும். இதேவேளை ஏனைய புகையிரத நேரங்கள் வழமை போலவே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவற்குழியில் துப்பாக்கி மீட்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பாலத்துக்கு அண்மையாக இருந்த பற்றைக்குள் இருந்து ரி-56 துப்பாக்கி ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவிலேயே இவை மீட்கப்பட்டன. அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே துப்பாக்கி, கைக்குண்டை தாம் மீட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் மீட்கப்பட்ட கைக்குண்டை 19 ஆம் பக்கம் பார்க்க


## சர்வதேச ஆய்வில் மகிந்த சிந்தனை

(கொழும்பு)

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் மாத்திரமல்லாது வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் கூட மகிந்த சிந்தனையை ஆராய்ந்து வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கூட்டுறவு பாதுகாப்பு நிறுவனத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

வெளிநாடுகள், உலக வங்கி அல்லது சர்வதேச நாணய நிதியம் என்பன ஆலோசனைகளை வழங்கினாலும் அந்த ஆலோசனைகளை அப்படியே செயற்படுத்தாது இலங்கைக்கே உரிய பொருளாதார முறையை உருவாக்கி கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.



# நிரந்தரக் கட்டடம் இன்மையால் கழகச் செயற்பாடு பாதிப்பு

மண்டைதீவு 'ரோஜாவனம்' சிறுவர் கழகத்தின் செயற்பாட்டிற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லாதிருப்பது கழகத்தின் செயற்பாட்டை பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தில் அமைந்திருந்த பொது நோக்கு மண்டபத்தில் இந்தச் சிறுவர் கழகம் இயங்கி வந்தது.

கடந்த ஆண்டு குறித்த பொது நோக்கு மண்டபம் கடும் காற்றுக் காரணமாக அதன் கூரை பெயர்த்தெறியப்பட்டு சேதமடைந்திருந்த நிலையில் குறித்த ரோஜாவனம் சிறுவர் கழகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே கழகத்திற்கு ஒரு கட்டடத்தை அமைத்து தருமாறு பல தரப்பினரிடமும் கோரிக்கை விடப்பட்டும் பயன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# நான்கு பேருக்கு டெங்கு

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நான்கு டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொக்குவில் பகுதியில் இருந்து இருவரும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவருமாக மொத்தம் நால்வர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக தெரிவித்த அந்த அதிகாரி இந்த மாதம் நேற்று வரை எட்டுப் பேரும், இந்த வருடத்தில் நேற்று வரை 647 பேரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம்

விசுவமடு கிழக்கு பகுதியில் திலீப்குமார் என்பவருக்கு கத்தியால் கடுமையாகத் தாக்கி கொலை செய்ய முற்பட்டதாக கூறப்பட்ட வழக்கில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு முகத்தோற்றளவில் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்கினை மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கில் நேற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தமது தரப்பு வழக்கினை முடித்து கொள்வதாகக் கூறியிருந்தார். மேல் நீதிமன்றின் அழைப்புக் கட்டளை வரும் பட்சத்தில் மேல் நீதிமன்றுக்கு ஆஜராக வேண்டுமெனவும் முன்னைய பிணையில் செல்லலாம் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (170)

# யாழ். செயலகத்தில் அனர்த்த தணிப்பு செயலமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட செயலமர்வு இன்று யாழ்.செயலகத்தில் இடம்பெறும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சிச் சபைகளின் முக்கிய அலுவலர்கள் 60 பேர் இன்றைய செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

பருவ மழை காலங்களினால் ஏற்படும் அபாயத்தினால் மக்களுக்கு எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்ற தலைப்பில் அதிகாரிகளுக்கான செயலமர்வு இன்று இடம்பெறும்.

இதில் உள்ளூராட்சி அதிகாரிகள் பங்கு தொடர்பாக உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி தெளிவுபடுத்தவுள்ளார்.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இச்செயலமர்வு இன்று மாலை 2.30 மணி வரை இடம்பெறும் என மேலதிக அரசாங்க அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹா குமபாபிஷேகம

யாழ்ப்பாணம், கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை ஸ்ரீ சபரீச ஐயப்ப சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன சப்த தசகுண்டபஷ பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 7.30 மணி முதல் 8.15 மணி வரை உள்ள விருட்சிகலக்ன சுப மூர்த்த சய வேளையில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு 8 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இடம்பெறும். சபரிமலை ஐயப்ப சுவாமிக்கு நெய் சயஷேகமும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு நல்லெண்ணெய்க் காப்பும் சாத்தி அடியார்கள் வழிபடலாம்.

அருளாசியுரையை சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி கலாநிதி ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் வழங்குவார். பிரதிஷ்டா பிரதம குருவாக டாக்டர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ ஜெனதீஸ்வர சிவாச்சாரியார் விளங்குவார்.

தொடர்ந்து மண்டலாபிஷேகமும், மகர ஜோதி மண்டல விரத முத்திர மாலை அணிவித்து மகர மண்டல மஹோற்சவம் சிறப்பாக நடைபெறும். (137)

# புதிய பாடத்திட்ட செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்திற் குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6, 10 ஆகிய வகுப்புகளுக்கு சுகாதாரம், உடற்கல்வி கற்பிக் கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டச் செயலமர்வு இடம் பெறவுள்ளது. சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், உடுவில், தெல்லிப்பளைக் கோட்ட ஆசிரியர்களுக்கு 7 ஆம் திகதி இராமநாதன் மகளிர் கல்லூரியிலும் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (66)

# இனத்தின் அடையாளங்களாக கிராம மக்களே விளங்குகின்றனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



(பூநகரி)

ஒரு இனத்தின் மொழி, கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களின், அடையாளங்களாக கிராமங்களில் வாழ்கின்ற மக்களே காணப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தின் கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் மொழி, பண்பாடு கலாசாரத்தில் அந்நிய கலாசார ஆக்கிரமிப்புகள், மொழி ஆதிக்கம் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றமை நாம் அவதானிக்கின்றோம். எனவே தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுக் கலாசாரம் விழுமியங்களை அதிலிருந்து பாதுகாக்க நடைமுறைச் சாத்தியமான வழியில் எவ்வாறு தீர்வு காணலாம் என்பது தொடர்பிலும் உணர்ச்சி வசப்பட்டு அல்லாமல் நிதானமாகப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் இந்த நூலில் ஆராயப்பட்டுள்ளது.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் அளவில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இந்த மாவட்டத்தை விட்டு அல்லது மாகாணத்தை விட்டு அல்லது இந்த நாட்டை விட்டு அதிகளவான தமிழ் மக்கள் சென்று விட்டார்கள். அவர்கள் வாழ்கின்ற சூழ்நிலை வித்தியாசமானது அங்கு அவர்கள் வேறொரு கலை, கலாசாரப் பண்பாட்டு விழிமியங்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். அங்கு அவர்களின் தாய் மொழியும் கலப்புக்குள் உள்ளாக்கப்படுகிறது. இது நடைமுறை வாழ்க்கையாக மாறிவிட்டது. தற்போது உள்ள பெரும்பாலான தமிழ்த் தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சித்தொகுப்பாளர்கள் தமிழ் பேசுவதில்லை அல்லது அவர்கள் பேசுகின்ற தமிழ், தமிழாக இருப்பதில்லை. ஆனால் இவற்றுக்குத்தான் சமூகத்தில் கைதட்டும், வரவேற்பும், கிடைக்கிறது. இன்று நகர்ப்புறத்தில வாழ்கின்ற பெரும்பாலான தமிழ்மக்கள் வேறு நாகரீக கலாசார சூழலுக்குள் சென்றுகொண்டிருக்கின்றார்கள். சிலர் தங்களை அறியாமலே அந்தச் சூழலுக்குள தள்ளப்படுகின்றார்கள்.

ஆனால் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் அவ்வாறு இல்லை இன்னும் மொழியையும் , பன்பாட்டையும், கலாசாரத்தையும் பாதுகாக்கின்ற, பேணி வருகின்ற மக்களாக வாழ்ந்து வருகின்றார்கள். பேச்சு,பழக்கவழக்கங்கள், உடை என எல்லாவற்றிலும் கிராம மக்களே இனத்திற்குரிய மொழி, கலை கலாசாரங்களை பாதுகாக்கின்றவர்களாக உள்ளனர் என்றார்.

பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி, ஓய்வு பெற்ற கிளிநொச்சி அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன், கரைச்சி பிரதேச செயலாளர் நாகேஸ்வரன், மாவட்டச் செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் கேதீஸ்வரன், பூநகரி பிரதேச சபையின் செயலர் மேரி மற்றும் கலைஞர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பிரதேச வாழ் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


### 1588 பேருக்கு 1000 ரூபா கொடுப்பனவு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான 1000 ரூபா மாதாந்தக் கொடுப்பனவை 1588 பேர் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர காசநோய், சிறுநீரக நோய், புற்றுநோய், தொழுநோய் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட 144 பேருக்கான மாதாந்தப் பண உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 31 முதியோர் சங்கங்கள் உள்ளன. பிரதேச மட்டத்தில் மூத்த பிரஜைகள் சங்கமும் அமைக்கப்பட்டு செயற்படுகிறது.

30 சங்கங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணம் சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு சங்கம் இன்னும் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யாமையினால் அதற்கு இப்பணம் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்படத்தக்கது.



சந்நிதியான் ஆசிரம கலை பண்பாட்டு ஞானச் சுடர் மலருக்கு 350 இற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதிய கலாபூஷணம், கலைமணி க.தெய்வேந்திரத்திற்கு கலாவித்தகர் சிவ.மகாலிங்கம் பொன்னாடை போர்த்தி 'பொற்குட பூஷா விருது' வழங்கிக் கௌரவிப்பதனைக் காணலாம். (படம் : இரா.சுதா)

# அலைந்து திரிந்த 81 வயது முதியவர் கைதடி முதியோர் இல்லத்தில் இணைவு

அநாதரவான நிலையில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்த புதிய சின்னக்குளம், நொச்சிமோட்டை, ஓமந்தையைச் சேர்ந்த நாகன் சிதம்பரம் என்னும் 81 வயதுடைய வயோதிபர் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளார்.

தனக்குத் திருமணமாகவில்லை என்றும், பிள்ளைகள் எவரும் இல்லையெனவும் தெரிவிக்கும் இவரது நிலையைக் கண்ட வவுனியா தெற்கு சிங்களப் பிரிவுக் கிராம அலுவலர், பிரதேச செயலர், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் ஆகியோர் இவரை இல்லத்தில் சேர்த்துள்ளனர்.

தன்னைப் பராமரிப்பதற்கு எவரும் இல்லை எனவும், தன்னை வெளியே விட்டால் தான் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான் என இல்ல அத்தியட்சகரிடம் கண்ணீர் விட்டு அழுது மன்றாடினார். இவரது பரிதாப நிலையைக் கண்ட அத்தியட்சகர் இவரைத் தற்காலிகமாக இல்லத்தில் சேர்த்துக் கொண்டுள்ளார்.

இவரைப் பற்றிய விபரங்கள் தெரிந்தவர்கள் எவராவது இருந்தால் அவர்களைக் கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (137)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3800)

# ஐயன் கோவிலடி மரப்பாலத்தை புனரமைக்க நடவடிக்கை

## கண்டாவளை பிரதேச செயலர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன் கோவிலடி கிராமத்துக்கான பிரதான வீதியான கண்டி வீதியில், தூர்ந்த நிலையில் காணப்படும் மரப் பாலத்தை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, கண்டாவளை பிரதேசசெயலர் ரி.முகுந்தன் நேற்று தெரிவித்தார்.

மேற்படி பாலம் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் அப்பகுதியூடாக பிரயாணம் செய்வதற்கு மக்கள் அச்சப்படுகின்றனர்.

இந்தக் கிராமத்தில் 27 வரையான குடும்பங்கள் வசித்து வருவதுடன், அவர்களுக்கு பிரதான வீதியாக இந்த வீதியே காணப்படுகின்றது. அவர்களது போக்குவரத்துக்கு இந்த சேதமடைந்த பாலம் பெரும் இடையூறாக காணப்படுகின்றது.

தற்போது பருவமழை பொழிய ஆரம்பித்துள்ளமையால், பாலம் மேலும் சேதமடைகின்றது. இந்நிலையில், மேற்படி பாலத்தை புனரமைத்து தருமாறு இக்கிராம மக்களும் முரசுமோட்டை பிரதேச பொது அமைப்புக்களும் கண்டாவளை பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

பாலம் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகளை விரைந்து ஆரம்பிப்பதற்கு ஆவன செய்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்புக்கான விசேட செயற்றிட்டம்

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாக சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதார குழுவினால் விசேட செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார குழுவினால் விசேட டெங்கு ஒழிப்பு வாரம் ஒன்று நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் இதன்படி எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் வாரத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையான சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு என்பன முன்னெடுக்கப்படவுள்ளதாக குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. டெங்கு நோய் ஏற்படவாய்ப்புள்ளதாக காணப்படும். வீடுகள் மற்றும் பொது இடங்கள் என்பன பரிசோதிக்கப்படவுள்ளதுடன் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குழுவினால் பொது மக்களுக்கு டெங்கு பற்றி விளக்கமளிக்கும் செயற்பாடும் இடம்பெறவுள்ளது.

## அதிபருக்கு மணிவிழா

யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ.சேதுராஜாவுக்கான மணிவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரிச் சமூகத்தினர் மற்றும் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து நடாத்தும் இவ்விழாவில் மணிவிழா மலர் வெளியீடும் வெளியீட்டுரையும் விழா நாயகனுக்கான கௌரவிப்பு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# இந்திய துணைத்தூதரகத்தால் நூல் தொகுதி கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தினால் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலுள்ள நூலகங்களுக்கென ஆயிரத்து 700 நூல்களை உள்ளடக்கிய நூல் தொகுதிவழங்கப்பட்டுள்ளது.

இந்நூல் தொகுதியை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை தூதரகத்தில் நடைபெற்றது. இதில் யாழ்.இந்திய பிரதித் துணைத் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இணைந்து நூலகங்களுக்கு பொறுப்பானவர்களிடம் கையளித்தனர்.

இதில் சமயம், உளவியல், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், சமையற்கலை, ஆங்கில நூல்களுக்கான தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் என்பன உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் –24




இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தரக் கூடியவர்கள், அதற்காக முயற்சிக்க வேண்டியவர்கள் அரசியல்வாதிகள் அல்லது போராட்டத்தை முன்னெடுப்போர் என்றே நமது மக்களில் அநேகரும் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இது தவறு. நமது அரசியல்வாதிகள் யாரும் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று விசுவாசமாகச் சிந்திப்பவர்கள் இல்லை.

அப்படி விசுவாசமாகச் சிந்திப்பவர்களாக இருந்தால் இதுவரையில் பல முன்னேற்றங்களை எட்டியிருப்பார்கள்.

இப்பொழுதும் இந்தியாவையும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தையும் காண்பித்து (சிறுவர்களுக்கு நிலாவைப் பராக்குக் காட்டி சோறு ஊட்டுவதைப்போல) தங்கள் அரசியல் இருப்பை – ஆதாயத்தைத் தக்க வைத்துக் கொள்கிறார்களே தவிர, வேறு எந்த நன்மையும் மக்களுக்கோ இனத்துக்கோ இந்த நாட்டுக்கோ ஏற்பட்டதில்லை.

ஆகையால்தான் அரசியல்வாதிகளை மட்டும் நம்பிப் பயனில்லை என்று அடித்துச் சொல்ல வேண்டியிருக்கு.

அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுத்து, அவர்கள் மக்களுடன் இணைந்து வாழ்ந்து, மக்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பைச் செய்யும் வகையில் அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு அழுத்தக் குழுக்கள் (Pressure Groups) அவசியம்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அப்படியான அழுத்தக் குழுக்கள் உள்ளனவா?

அப்பிடியென்றால் இதுவரையில் அப்படியான அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்படாமல் இருப்பது ஏன்?

இவ்வளவு கொதிநிலையில் உள்ள ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அழுத்தத்தைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு புலம்பெயர்ந்தோரிடத்திலும் இங்கே நாட்டிலும் அழுத்தக் குழுக்கள் செயற்பட்டுக்கொண்டிருக்க வேணும்.

ஆனால் இதைப்பற்றி யாரும் சிந்தித்ததாக இல்லை. அப்பிடி அழுத்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டாலும் அரசியலில் இருப்போர் அவற்றை உடனடியாக அங்கீகரித்து விடுவர் என்றில்லை.

தம்மீது நெருக்கடிகளை ஏற்படுத்தும் எந்தத் தரப்பையும் இப்பிடிச் சுயாதீனமாக – கேள்வி கேப்பார் இல்லாமல் – தனிக்காட்டு ராஜாக்களைப் போல இருந்தவர்களுக்கு – கசப்பாகவே இருக்கும்.

ஆகவே இந்த அழுத்தக் குழுக்களை இவர்கள் கடுமையாக எதிர்ப்பர்: அல்லது புறக்கணிப்பர். அல்லது இனத்துரோகிகள், அரசாங்கத்தின் ஆட்கள் என்டெல்லாம் வசைபாடுவர்.

ஆனால் இதையெல்லாம் கடந்து அழுத்தக் குழுக்கள் செயற்பட வேணும். அழுத்தக் குழுக்கள் என்பது அப்படியானவையே. அதாவது விழிப்புணர்வும் உறுதியும் தீர்க்கதரிசனப் பார்வையும் உடைய திறனைக் கொண்டிருக்க வேணும்.

இதைப்போல, தீர்வை எட்டுவதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆராயக்கூடிய – தீர்வைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய சிந்தனைக் குழுக்களும் தேவை.

இந்த இரண்டு குழுக்களும் சீராக இயங்கினால் அரசியல்வாதிகளும் கட்சிகளும் காலங்கடத்தவும் முடியாது. மக்களை ஏமாற்றவும் முடியாது.

இதேவேளை இவற்றுக்கு நிகரான் பாத்திரத்தை ஊடகங்களும் வகிக்க வேணும். உரிய பங்களிப்பை அவை செய்ய வேணும்.

ஆனால் தமிழ் ஊடகங்களும் தமிழ்ப்புலமையாளர்களும் சுயநலமும் ஆளுமைக்குறைவும் கள்ளத்தனமும் நிறைந்த அரசியல்வாதிகளின் எடுபிடிகளாகவும் பின்னோடிகளாகவும் ஒத்தோடிகளாகவுமே உள்ளதைத்தான் காண முடிகிறது.

இந்த நிலை நீடித்தால் சுடுகாட்டில் வாழ்வதற்கே ஒப்பாகும்.

இதுவரையான அரசியல் நடவடிக்கைள் மணப்பால் குடித்ததற்கு ஒப்பானதாகவே உள்ளது.

யதார்த்த நிலைமைகளையும் உலகத்தின் போக்கினையும் அதனுடைய இயங்கு நிலையையும் கணக்கில் கொள்ளாமல் பழைய்ய்ய வாய்ப்பாட்டையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தால் தீர்வு எப்பிடி வரும்?

ஆகவே முற்றிலும் புதிய நிலையில் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டியுள்ளது.

இனப்பிரச்சினையையும் அதற்கு அப்பால் உள்ள சமூகப்பிரச்சினைகளான சாதியம், பிரதேசவாதம், மதநிலைப்பட்ட வேறுபாடுகள், பால் அசமத்துவம் எனப் பல பிரச்சினைகள் எம்மைச் சுற்றியுள்ளன.

இவற்றோடு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினையும் வெளி அழுத்தங்களும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டிய அவசியத்தில் உள்ளவை.

இவையெல்லாவற்றையும் விட்டு விட்டு முதன்மைப் பிரச்சினையை மட்டும் பார்ப்போம் என்டு இனப்பிரச்சினையை முதன்மைப்படுத்த முடியாது.

நாம் துன்பப்படுவது நம் செயல்களின் காரணமாகத்தான். அதற்குக் கடவுள் பொறுப்பல்ல. - விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புத்திஜீவிகளின் பொறுப்பென்ன?

"மலையக மக்களுக்கான உதவிகள் குறித்து கூடி ஆராய்கின்றது வடக்கு அரசு, பதுங்குகின்றது கொழும்பு அரசு", "கொழும்பு அரசை விட சிறந்தது வடக்கு அரசு – நாடாளுமன்றத்தில் சுரேஷ் எம்பி தெரிவிப்பு" என்றெல்லாம் கூட்டமைப்புப் பத்திரிகையில் எழுதப்படுகிறது.

ஒருபுறம் மாகாண சபைக்கு எந்த அதிகாரங்களும் இல்லை என்று புறணி சொல்லிக்கொண்டு, இப்படி கொழும்பு அரசுக்குப் போட்டியாக யாழ்ப்பாணத்தில் வடக்கு அரசு இயங்கிவருகிறது என தமிழ்த தேசியக் கூட்டமைப்பு தம்பட்டம் அடித்துக்கொள்வது ஏன்?

மாகாண சபைக்கு குறிப்பிட்ட சட்டங்களை ஆக்குவதற்கான அதிகாரமும், அவற்றைச் செயலாக்குவதற்கான மந்திரி சபையும் இருக்கிறது என்றபோதும் கிழக்கு அரசு, தெற்கு அரசு, ஊவா அரசு, சப்பிரகமுவ அரசு என்றெல்லாம் அந்த மாகாண அரசாங்கங்கள் எவையும் குறிப்பிட்டுக்கொள்வதில்லை.

கூட்டமைப்புப் பத்திரிகை ஏன் 'வடக்கு அரசு... வடக்கு அரசு' என்று எழுதுகிறது? மற்றைய மாகாணங்களைப் போல இல்லாமல் வடக்கு அரசை தனி இறைமையுள்ள அதாவது தனிநாட்டுக்கு இணையானதாக மாற்றிவிடுவதை நோக்கியே தாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று தமிழ்மக்களுக்குப் 'பாவலா' காட்டுகிறார்கள்.

அப்படித் தனி அரசாக மாறும்வரை, "வடக்கு மாகாணசபை மக்களுக்கு என்ன செய்தது... அபிவிருத்திகள் ஏன் நடைபெறவில்லை... ஒதுக்கப்பட்ட நிதி ஏன் திரும்பிச் செல்கிறது..." என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள் என்று மக்களுக்குப் பூச்சுற்றவே இந்தக் கதை!

ஏனைய தமிழ் ஊடகத்தினரும் அரசியல் ஆய்வுகளை எழுதும் புத்திஜீவிகளும் கூட, இந்த தன்னாட்சி தனியரசுக் கதையெல்லாம் சாத்தியமா? இனிமேல் எப்படி அது நடக்கும்? எப்போது, யாரால் நடக்கும்? என்றெல்லாம் எந்தக் கேள்வியும் எழுப்பாமலே, அதற்குரிய சாத்தியங்களை விவாதிக்காமலே... கூட்டமைப்பினர் வாய்ப்பேச்சில் விழுத்தும் மாடுகளுக்கு மேல் ஏறிக் குறிசுடுவதைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் பிறகும், பொய்யான நம்பிக்கைகளைச் சொல்லி மக்களை உணர்ச்சியேற்றிக் கொந்தளிக்க வைத்துக் கொண்டிருப்பதுதானா ஊடகங்களினதும் தமிழ்ப் புத்திஜீவிகளினதும் பொறுப்புணர்ச்சி?

போர்க்காலப் பதற்ற நிலைமையையும், எதிரிகளைத் தோற்றுவித்துச் சீண்டிக்கொண்டிருக்கும் விறுவிறுப்புச் செய்திகளையும் தயாரித்து விநியோகித்துக் கொண்டிருக்க, வியாபாரத்தில் குறியாயுள்ள ஊடக முதலாளிகள் விரும்பலாம். புத்திஜீவிகளும் எழுத்தாளர்களும் யதார்த்தம் புரிந்து, தங்கள் பொறுப்புணர வேண்டாமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கு மறைமுகமாகக் கொடுக்கும் கள்ள நம்பிக்கையைப் போல அந்தத் தனியரசு எல்லாம் இனி இங்கு சாத்தியமா? அல்லது சர்வதேசமோ இந்தியாவோ வந்து இங்கு வடக்கு கிழக்கு இணைந்த தன்னாட்சித் தனியலகு என்று எதையாவது எடுத்துத் தருவதுதான் நடக்குமா?

இலங்கைக்குள் ஒரு தீர்வைக் கண்டு, இங்குள்ள ஏனைய சமூகத்தினருடனும் சேர்ந்துதான் வாழப் போகிறோமென்றால், யாரிடம், எப்படிப் பேசவேண்டும் என்று தெரியாத முட்டாள்களா நாங்கள்? அல்லது யதார்த்தத்தைக் காண மறுக்கும் வீம்புக் குருடர்களா?

போர்க்காலச் சூளுரைகளையும், யுத்தச் சூழ்நிலைமைகளையும் ஞாபகப்படுத்தும் வார்த்தைகளைக் கேட்டாலே மனம் நடுங்கக் கூடிய மக்களே இன்று நம்மிடையே பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, மக்கள்மீது அக்கறையுள்ள ஊடகங்களும் எழுத்தாளர்களும் மக்களை அதிர்ச்சி ஆக்காமல் எழுத மனங்கொள்ள வேண்டுமல்லவா? திரும்பவும் ஒரு யுத்தத்துக்குள் நமது மக்களைத் தள்ளுவதை சமூக அக்கறையுள்ள எவர்தான் விரும்ப முடியும்?

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பாரியளவில் வளர்ச்சியடையும்."

– கிரேக்கப்பழமொழி–

# பட்ஜெட் மூன்றாம் வாசிப்பின் முன் பதில் வழங்கும் அரசாங்கம்

### நம்பிக்கை கொள்ளும் ஹெலஉறுமய

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் முறை வாசிப்பின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னதாக தாம் முன்வைத்துள்ள யோசனை குறித்து அரசாங்கம் இறுதி முடிவை அறிவிக்கும் என நம்புவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய அண்மையில் அரசாங்கத்திடம் முன்வைத்த யோசனைகளுக்கு இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த சிறி வர்ணசிங்க தெரி வித்துள்ளார்.

யோசனைகள் குறித்து அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. இதனால் அரசாங்கமே இறுதி முடிவை அறிவிக்க வேண்டும்.

ஆனால், அரசாங்கம் இதுவரை தனது பதிலை அறிவிக்காததால், வரவு - செலவுத் திட்டம் தொடர்பான இரண்டாம் முறை வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் ஜாதிக ஹெல உறுமய கலந்து கொள்ளவில்லை.

அரசாங்கம், நாங்கள் முன்வைத்துள்ள யோசனைக்கு பதிலளிக்கும் பட்சத்திலேயே மூன்றாம் முறை வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்வதா இல்லையா என்று தீர்மானிக்கப்படும் எனவும் நிஷாந்த சிறி வர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# தரம் 9,11 மாணவர்களுக்கான மாகாணமட்ட முன்னோடிப்பரீட்சை

மாகாண மட்டத்தில் நடத்தப்படும் க.பொ.த. சாதாரணதர முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதியும் 9 ஆம் தர மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சை 19 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதிவரை இடம்பெறும் க.பொ.த. சாதாரண தர முன்னோடிப்பரீட்சையில் 10 ஆம் திகதி தமிழ் மொழி, 11 ஆம் திகதி கணிதம், 12 ஆம் திகதி விஞ்ஞானம் , 13 ஆம் திகதி வரலாறு, 14ஆம் திகதி ஆங்கிலம், 15ஆம் திகதி சமயம், 17 ஆம் திகதி தொகுதி I பாடங்களுக்கானதும் 18 ஆம் திகதி தொகுதி II பாடங்களுக்கானதும் 19 ஆம் திகதி தொகுதி III பாடங்களுக்கான பரீட் சைகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தரம் 9 இற் கான மாகாணமட்ட பொதுப்பரீட்சையில் 19 ஆம் திகதி தமிழ்ப் பாடமும் 20 ஆம் திகதி கணித பாடமும் 21 ஆம் திகதி ஆங்கிலப் பாடமும் 22 ஆம் திகதி அழகியற்பாடமும் 24 ஆம் திகதி விஞ்ஞான பாடமும் 25 ஆம் திகதி வரலாற்றுப் பாடமும் 26 ஆம் திகதி சமய பாடமும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# விதைகள் விநியோகம்

திவிநெகும (வாழ்வின் எழுச்சி) தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை பிரதேசத்தில் நாற்றுக்கள், மரக்கறிவகைகள் மற்றும் மரங்கள் என்பன தேர்வு செய்யப்பட்ட சில வீடுகளில் கையளிக்கப்பட்டு நாட்டப்பட்டன. கிராம சேவையாளர் அலுவலகத்தின் உதவியுடன் நடைபெற்ற இத்திட்டத்தில், மக்கள் விவசாய உற்பத்திகளில் தம்மை ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் இத்துறை யில் தன்னிறைவு் காண்பதற்கு வழிவகைகள் என்பன விளக்கப்பட்டிருந்தன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மற்றும் விவசாய அமைச்சுக்களின் பங்களிப்போடு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போன கணவரை தேடிய சிங்களப்பெண்ணுக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

காணாமற் போன தனது கணவரை மீட்டுத் தருமாறு ஊடகங்களில் கோரி வரும் சிங்களப் பெண் ஒருவருக்கு இனந் தெரியாத துப்பாக்கிதாரிகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அநுராதபுரம் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயான மயூரி இனோகா குமாரி ஜயசேன என்பவரே இவ்வாறு இனந்தெரியாத நபர்களினால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை இரவு பிள்ளைகளுக்கு பால் வாங்குவதற்காக கடைக்குச் சென்றிருந்த போது இனந்தெரியாத நபர்கள் என்னை துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தி கடத்திச் சென்றனர் என மயூரி தெரிவித்துள்ளார்.

முச்சக்கர வண்டிக்குள் நுழைந்த வாட்டசாட்டமான நபர் ஒருவர் என் கைகளையும் கண்களையும் கட்டி கடுமையாக திட்டினார். என்னை மற்றுமொரு வாகனத்தில் ஏற்றி ஒன்றரை மணித்தியாலம் பயணித்தனர்.

கணவர் பற்றி பேசுவதனை நிறுத்திக்கொள்ள வேண்டும் என இனந்தெரியாத நபர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

உனக்கு வாய் கூட, உயிருடன் வாழ வேண்டுமா இல்லையா என்பதனை தீர்மானித்துக் கொள் மேடைகளில் ஏறி பேசுவதன் மூலம் கணவரை மீட்க முடியாது என அவர்கள் எச்சரித்தனர்.

பின்னர் வாகனத்தை விட்டு இறக்கிவிட்டு சென்று விட்டனர். அச்சுறுத்திய நபர்கள் தங்களை பாதுகாப்பு தரப்பினர் என அடையாளப்படுத்திக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் சிவில் உடையில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் என்னை பாலியல் தொழிலாளியா எனக் கேட்டு விசாரணை நடத்தினார். என்னை அசௌகரியத்தில் ஆழ்த்தும் வகையிலான கேள்விகளை கேட்டு விசாரணை செய்தார் என மயூரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மதுஸ்க ஹரிஸ் சில்வா என்ற தமது கணவரை கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் காணவில்லை எனவும் அவரை மீட்டுத் தருமாறும் கோரியுள்ளார்.

# முன்னாள் புலிகள் இருவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

இராணுவ சிங்கப்படைத் தலைவர் மற்றும் வில்பத்து சரணாலய உரிமையாளர் உள்ளிட்ட 8 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைதாகியுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்ற நீதிபதி கேமா சுவர்ணாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

உதயன் என்ற சூரியகாந்தன் ஜெயசந்திரன் மற்றும் இளையன் எனப்படும் சிவப்பிரகாசம் சிவசீலன் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 2007 மார்ச் மாதம் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை பாடசாலை முதல்வர் ந.ஜெயரூபன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி ஆலோசகர் அ.மனோரஞ்சிதன், பாடசாலையின் பழைய மாணவனும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புனர்வாழ்வு உத்தியோகத்தருமாகிய மு.கயோதரன் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும், மாணவரின் கலை நிகழ்வையும் காணலாம். (90)

# விஞ்ஞானபாடத்தை ஆசிரியர்கள் செயன்முறை மூலம் கற்பிக்க வேண்டும்

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

மாணவர்கள் விரும்பும் வகையில் உபகரணங்களின் உதவியுடன் செயன்முறை விளக்கங்களுடன், நேரடி அவதானிப்புக்களைப் பெறக்கூடிய வகையில் விஞ்ஞான பாடத்தை ஆசிரியர்கள் கற்பிக்கும் போது மாணவர்களும் அதனை ஆர்வத்துடனும், விருப்புடனும் கற்றுக் கொள்ள முன்வருவார்கள். செயற்றிறனும், ஆளுமையும் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கிக் கொளளும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களின் கைகளிலேயே உள்ளது இதனை உணர்ந்து ஒவ்வொரு ஆசிரியர்களும் செயற்பட வேண்டியது அவர்களின் கடமையாகும் என யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற மாணவர்களுக்கான இலகு வழி சுயகற்றல் விஞ்ஞான நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்றைய சூழலில் எமது மாணவர்கள் விஞ்ஞானத்துறையினை மேற்படிப்புக்காக தெரிவு செய்யும் அளவு வெகுவாகக் குறைந்து கொண்டே செல்கின்றது. இதற்கு அவர்களின் விஞ்ஞான அடிப்படைத்திறன்கள் குறைவாக இருப்பதே காரணமாகும். மாணவர்களுக்கு சிறு பராயத்திலிருந்தே விஞ்ஞான அறிவினையும், தேர்ச்சியினையும் விருத்தி செய்து கொள்ளும் வகையில் செய்முறைகளுடன் கூடிய விளக்கங்களுடன் மாணவர்களை முழுமையாக ஈடுபடுத்தி கற்பித்தல் நடவடிக்கைகள் நடைபெறுவதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

செயற்பாட்டுடன் கூடிய கற்றல் செயற்பாடுகள் கூடிய நினைவாற்றலை உருவாக்குவதுடன் கற்றலுக்கான ஊக்கத்தையும் வழங்குகின்றது. இதனைப் பின்பற்றி ஆசிரியர்கள் செயற்படுவார்களேயானால் அதன் பயனை மாணவர்களும் சுலபமாக அடைந்து விடுவார்கள். பல்கலைக்கழகங்களில் கணித, விஞ்ஞானத் துறைகளில் பயின்று வரும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்வதனை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

இதனை மாணவர் மத்தியில் தெளிவுபடுத்தி அவர்களை விஞ்ஞான கணித துறைகளை உயர்தரத்தில் தெரிவு செய்து கற்பதற்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். விஞ்ஞான பாடத் துறையானது பரந்துபட்ட ஓர் துறையாகும். இதனைக் கற்பதன் மூலம் ஏராளமான தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும். ஆதலால் மாணவர்களும் அதீத அக்கறையுடன் அத்துறையினை தெரிவு செய்து கற்க வேண்டும் என்றார். (03)

# பரிசளிப்பு நிகழ்வுகள்

(அச்சுவேலி)

ஆவரங்கால் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் க.ரவீந்திரன் தலைமையில் பாடசாலை உள்ளக அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் கு.ரவிச்சந்திரன் மற்றும் கோப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் சு.சற்குணராஜா ஆகியோரும், கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் வலிகாமம் கிழக்கு மத்தியஸ்தர் சபையின் உறுப்பினருமான லயன்.இ.சிவஞானம் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் திறமையாகச் செயற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (03)

◆◆◆ ◆◆◆ ◆◆◆

(அச்சுவேலி)

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் பாடசாலை பிரதான அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாண மெற்றோ கிளையின் முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபர் ச.வேலழகன் மற்றும் ஓய்வு பெற்ற பிரதி அதிபர் அ.பத்மநாதன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக ஊரெழு கணேசா வித்தியாலயத்தின் ஆசிரியர் செல்வி ந.அனுராதா மற்றும் வலிகாமம் கிழக்கு (தென்பகுதி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை மேற்பார்வையாளர் க.யோகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். மேற்படி நிகழ்வில் திறமையாகச் செயற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதுடன் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (03)

# மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக வளாகத்தினுள் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான புதிய மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் பா.செந்தில்நந்த னன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலர் மற்றும் நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரநாதன் பிரதேச செயலக கணக்காளர், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிளினிக் சிகிச்சை பெறும் நோயாளர்களால் சிரமப்படும் வைத்தியசாலை ஊழியர்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி வைத்தியசாலையில் கிளினிக் சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் கிளினிக் சிகிச்சை தொடர்பான விதிமுறைகளை சரியாக பின்பற்றுவதில்லை எனவும் இதனால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் வைத்தியசாலை ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிளினிக் சிகிச்சை பெறும் நோயாளர்கள் கிளினிக் கொப்பிக்குரிய இலகத்தை மறந்துவிட்டு வருவதாகவும் துண்டுச் சிட்டையில் எழுதி வழங்கப்பட்டதை கொண்டுவராது விடுவதாகவும் மற்றும் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து சிகிச்சை பெறவருவதாலும் தாம சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நோயாளர்களின் கொப்பியை தேடுவதற்கிடையில் ஒழுங்குமுறையாக வரும் கிளினிக் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலையும் ஏற்படுவதாக தெரிவிக்கும் ஊழியர்கள் நோயாளர்கள் சிறிதளவேனும் அக்கறையுடன் செயற்படவேண்டும் என தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் நோயாளர்கள் சிந்தித்து ஏனைய நோயாளர்களும் ஊழியர்களும் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்க்கும் வகையில் செயற்பட வேண்டும் என ஊழியர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (85)

# கலாமன்றம் திறப்பு

மன்னார் சாவற்காட்டுப் பகுதியில் காவேரி கலாமன்றத்தின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

அருட்தந்தை ஜோசுவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாமன்றம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பின்தங்கிய இப்பிரதேசத்தில் கலை கலாசாரத்தை மேம்படுத்தும் வகைல் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் கலையை வளர்க்கும் நோக்குடனும் இக்கலாமன்றம் திறக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (140)

# முகசீரமைப்பு மருத்துவர் பாலாஜி இலங்கை வருகை

இந்தியாவின் பிரபலமான முகசீரமைப்பு சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி எஸ்.எம்.பாலாஜி இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இலங்கை மக்களின் நலன்கருதி வருகை தரும் வைத்தியரை முகசீரமைப்பு, பார்வைக்குறைபாடு, செவிப்புலன் தொடர்பாக சிகிச்சை பெறவிரும்பும் நோயாளர்கள் எதிர்வரும் 15, 16 ஆம திகதிகளில் சந்திக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் வாசன் ஐ கெயர் போன்ற நிறுவனங்களூடாக சத்திரசிகிச்சை செய்த இலங்கை நோயாளர்கள் மற்றும் வைத்திய சிகிச்சை பெறவிரும்புபவர்கள் மற்றும் சந்திக்க விரும்புவர்களும் ஆர்வமுள்ளவர்களும் கொழும்பில் சித்திரா இராமலிங்கம் தொ.பே. 0773695579, 2362995 அல்லது தனலக்சுமி சென்னை ஊடாக தொ.பே. இல 91 9841007934 தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

# மண்சரிவு அனர்த்தம் நிகழ்வதற்கு மரக்கறி செய்கையே பிரதானகாரணம்

## ஆராய்ச்சி மூலம் கண்டறிவு



கொஸ்லாந்த மீரியபெத்தயில் மண்சரிவு ஏற்பட பிரதான காரணம் அங்கு வசித்த மக்கள் அப்பகுதியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் மரக்கறி உற்பத்தி செய்தமையே என ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.

இற்றைக்கு எட்டு வருடங்களுக்கு முன்னர் இப்பகுதி பாதுகாக்கப்பட வேண்டிய ஓரிடம் என எல்லையிடப்பட்டு தூண்களும் நடப்பட்டு இலக்கமிடப்பட்டதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட பேராதனை பல்கலைக் கழக புவியியல் விஞ்ஞானப் பேராசிரியர் கபில தஹநாயக்கா, மேல் நீர்பரப்பு பாதுகாப்பு திட்ட முன்னாள் பணிப்பாளரும் சுற்றாடல் ஆய்வாளருமான டி.ரீ. முனவீர ஆகியோர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக் கூடாதென எட்டு வருடங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகத்துக்கும் அறிவிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவிடயமாக அதிகாரிகளும், தோட்ட மக்களும் கவனம் செலுத்தவில்லை. இப்பகுதியில் மரக்கறி உற்பத்தி வியாபித்து உள்ளதாகவும் முனவீர தெரிவித்தார்.

# உறுதியற்ற நிலையில் நிலம் உடன் அறிவிக்க கோரிக்கை

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் நிலம் உறுதியற்ற தன்மையில் இருக்குமாயின் அதுகுறித்து அறிவிக்குமாறு தேசிய கட்டட ஆய்வுகள் அமைப்பு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் உடன் அறிவிக்குமாறு புவியியல் ஆய்வு நிபுணர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன், தமது மாவட்ட காரியாலயங்களில் உள்ள தமது அமைப்பின் அதிகாரிகளிடமும் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், பதுளை, நுவரெலியா, மாத்தளை, கேகாலை, கண்டி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அறிவிக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆய்வுகள் அமைப்பின் விசேட நிபுணர்கள் சிலரும் பதுளை மற்றும் நுவரெலிய மாவட்டங்களில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இயற்கை சீற்றம் காரணமாக 11 ஆயிரத்து 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# யாழிலிருந்து கொழும்பிற்கு யாழ்தேவி ஊடாக மரக்கறிகள்

## ஆராய்ந்து வருகிறது அரசு



'யாழ் தேவி' ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு மரக்கறி வகைகளை எடுத்து வருவது குறித்தும் நாம் ஆராய்ந்து வருவதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கரட், லீட்ஸ் ஆகியவற்றைத் தவிர்ந்த ஏனைய அனைத்து வகை மரக்கறிகளையும் யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றை ரயிலூடாக கொழும்புக்கு கொண்டு வருவதன் மூலம் மரக்கறி களுக்கான விலைகளை மேலும் குறைக்க முடியும். அத்துடன் போக்குவரத்து செலவு நேரம் ஆகியன மிச்சப்படுத் தப்படுவதுடன், லொறிகளில் ஏற்றி இறக்குவதால் மரக்கறிகளுக்கு ஏற்படக் கூடிய 25 சதவீத சேதத்தை தவிர்க்கக் கூடியதாக இருக்குமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.


அத்துடன் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டே யாழ்தேவி ரயில் சேவை கல்கிசை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதேயொழிய இராணுவத்தினரின் வசதிக்காக இல்லையெனவும் அவர் தெரிவிததார். இராணுவத்தினர் யாழ்ப்பாணம் செல்வதை நோக்கமாகக் கொண்டு 'யாழ்தேவி' ரயில் சேவையினை ஆரம்பித்திருப்பின் அதனை கொழும்பு கோட்டை வரை மட்டுப்படுத்தியிருக்கவோ அல்லது பனாகொடை வரை அதன் சேவையை விஸ்தரித்திருககவோ நாம் ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்போமெனவும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு மற்றும் அதன் சுற்றுப் புறங்களை கவனத்திற் கொண்டால் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, கல்கிசை ஆகிய பகுதிகளிலேயே தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். அவர்களின் வசதி கருதியே இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போது கல்கிசையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நான்கு ரயில்கள் செல்கின்றன. சுமார் 2500 பயணிகள் மாத்திரமே செலலக்கூடிய இந்த ரயில்களுக்காக நாள்தோறும் சுமார் 5 ஆயிரம் பேர் ரயில் சீட்டைப் பெற்றுக் கொள்ள வருகின்றனர். 'யாழ் தேவி' ரயிலுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் புதிதாக மேலும பல ரயில் வண்டிகளை சேவையிலீடுபடுத்துமாறும் எமக்கு கோரிக்கைகள் கிடைத்துள்ளன.

நடைமுறையிலுள்ள ரயில் வண்டிகளுடன் புதிதாக ரயில் பெட்டிகளை இணைத்துக் கொள்வது சாத்தியமாகாது என்பதால் ரயில் வண்டிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பது குறித்தும் நாம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

# பிரிட்டன் பிரஜைகள் மீது தாக்குதல்; கவனம் செலுத்தும் உயர் ஸ்தானிகரகம்



அமைச்சர் மேவின் சில்வாவின் மகன் மாலகவினால் பிரித்தானியாவின் இளைஞனும் யுவதியும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த சம்பவம், கொழும்பு, டுப்ளிகேசன் வீதியில் உள்ள இரவு நேர கேளிக்கையகத்தில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது. இதன்போது பிரித்தானிய ஜோடிகளுக்கு முகங்களிலும் தலைகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கருத்துக்கூற முடியவில்லை என்று பிரித்தானிய உயர்ஸ்தானிகரம் குறிப்பிட்டுள்ளது.

சம்பவத்தின் போது 43 வயதான ஸ்கொட்லாந்தின் ஜேம்ஸ் பிரான்ஸிஸ் மற்றும் அவருடைய நண்பியான 24 வயதான பெலின்டா மேக்கனைஸ் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்

எனினும் குறித்த பிரித்தானியர்கள் பொலிஸ் விசாரணைக்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2011ஆம் ஆண்டும் தங்காலையில் வைத்து பிரித்தானிய ஜோடி மீது நடாத்தப்பட்ட தாக்குதல் விடயம் சர்வதேச அளவில் இலங்கைக்கு பிரச்சினையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# ஷிராணிக்கு எதிரான நடவழக்கை விளக்கம் கோருகிறது ஐ.நா.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசாங்கம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டது. இதன் காரணமாக அவர் பதவியும் பறிக்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கை உள்ளிட்ட சில நாடுகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையம் இடைக்கால அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அரசாங்கம் அநீதியான முறையில் ஷிராணியின் பதவியைப் பறித்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாத தடுப்புச் சட்டம், காலவரையறையற்ற தடுப்புக்காவல், சித்திரவதைகள் தொடர்பிலும் இந்த அறிக்கையில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கை கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் மூலமாக அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருக்கு கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

# வடக்கின் மருமகனாக நாமல்; ஆசைப்படும் விஜயகலா எம்.பி.



தேசிய ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவதற்காக வடமாகாணத்தைச் சேர்ந்த தமிழ் யுவதி ஒருவரை, ஜனாதிபதியின் மூத்த புதல்வரும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நாமல் ராஜபக்ஷ எம்.பி.யை சந்தித்து கலந்துரையாடிக்கொண்டிருக்கும் போதே, விஜயகலா எம்பி மேற்கண்டவாறு கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

"நாமல் எம்.பி மீது எமது பிரதேச பெண்களுக்கு மிகவும் விருப்பம். அதனால், அவர் எமது பிரதேச பெண்ணொருவரை திருமணம் செய்துகொள்வதை நாம் விரும்புகின்றோம்.

அப்போது, தேசிய ஒற்றுமை தொடர்பான பிரச்சினைகள் எல்லாம் முற்றுப்பெறும். இதற்கு அவர் விரும்பினால், நல்ல பெண்ணொருவரைப் பார்த்துக்கொடுக்க வேண்டிய பொறுப்பை நான் ஏற்கிறேன் என நாமல் எம்.பி.யிடம் விஜயகலா எம்.பி தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள நாமல் ராஜபக்ஷ, "திருமணம் செயதுவைத்து என்னை விரைவில் சிறை வைக்கவா பார்க்கிறீர்கள்?. சரி பரவாயில்லை, இந்த யோசனையை முதலில் என் பெற்றோருக்கு தெரிவித்துப் பாருங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

# பதவி அரசியலை கைவிடுவதற்கு தயாராகிறது முஸ்லிம் காங்கிரஸ்

எதிர்காலத்தில் பதவி அரசியலைக் கைவிட முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம், பொத்துவில், பசறிச்சேனையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சுப் பதவிகள் உள்ளிட்ட பதவி அரசியல் மூலம் முஸ்லிம்களின் அரசியல் இருப்பு, உரிமைகள், எதிர்பார்ப்புகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் பதவி அரசியல் நிலைப்பாட்டிலிருந்து வெளியே வர முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தேசிய தேர்தலில் யாரும் எதிர்பார்த்திராத முக்கியமான நகர்வு ஒன்றை கட்சி மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


# வெளிநாடு செல்ல மாலகவிற்கு தடை




அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குற்றச்செயல் ஒன்றுக்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ள அவர் தற்பொழுது தனியார் மருத்துவமனையொன்றில் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்றுவருகின்றார். இவர் மேலதிக சிகிச்சையைக் காரணம் காட்டி வெளிநாடு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டதையடுத்தே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பம்பலப்பிட்டியிலுள்ள இரவு விடுதியொன்றில் வைத்து பிரித்தானியஜோடி ஒன்றின் மீது தாக்குதல் நடாத்தியதாக தெரிவித்து சந்தேகத்தின் பேரில் இவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





யாழ்/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றபோது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய இசைஆசிரியர் திருமதி கல்யாணி, நூலகத்திற்கான அன்பளிப்பு பொருட்களை பொறுப்பாசிரியரிடம் கையளிப்பதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (85)

# நலத்திட்டங்களை செயற்படுத்துவதில் முன்னுதாரணமானவர் சந்திரகுமார் எம்.பி.

## வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் நலத்திட்டங்களை சரியாக செயற்படுத்தி மக்களுக்கு வழங்குவதில் ஒரு முன்னுதாரணமான மக்கள் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் விளங்குகின்றார். என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் யூனியன் குளம் பகுதிக்கான மின் விநியோக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கோணாவில் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்ட போது யூனியன்கு' மக்கள் தமக்கு எப்போது மின்சாரம் வரும் என்ற ஏக்கத்தோடு காத்திருந்தார்கள்.

அப்போது இப் பகுதிக்கும் விரைவாக மின்சாரம் வழங்கப்படும் என்ற உறுதி மொழியை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வழங்கியிருந்தார் அந்த உறுதிமொழி இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 25 வருட காலமாக யாழ்.மாவட்டத்திலும், கடந்த ஐந்து வருடகாலமாக கிளிநொச்சி மாவட்டத்திலும் எமது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியும் எமது அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாவும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின முக்கியஸ்த்தர்களும் மக்களுடன் இணைந்து ஆற்றிய பணியின் பயனாகவே யாழ்.மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் இன்று அபிவிருத்தியில் ஒரு பாய்ச்சல் வளர்ச்சியை எட்டியிருக்கின்றது.

அத்தோடு மக்களின் வாழ்வாதாரத்திலும் அடிப்படை வசதிகளிலும் கூட முன்னேற்றங்களை எட்டியிருக்கின்றது என்றார்.

# வலிகாமம் கிழக்குப் பகுதியில் வெங்காயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாண குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே பெய்து வரும் பருவமழையினால் வலிகாமம் கிழக்குப் பகுதியில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் பலரும் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

விதை வெங்காய உற்பத்திக்காக மேட்டுநில வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்த வலிகாமம் கிழக்குப் பகுதியின் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, போன்ற பிரதேசங்களில் வாழும் விவசாயிகளின் வெங்காயத் தோட்டங்களே தொடர்ச்சியான மழையின் காரணமாக முழுமையாக அழிவடைந்துள்ளன. இதனால் அப்பகுதி விவசாயிகள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மேலும் வெங்காயச் செய்கையில் ஏற்பட்ட இவ் அழிவு நிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் விதை வெங்காயத்தின் விலை உச்சமடையலாம் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (03)

# முரசின் இன்றைய பலன்

(04.11.2014 செவ்வாய்க்கிழமை)



ஜய வருஷம் ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி.
துவாதசி / அமிர்தசித்தம்.
உத்தரட்டாதி நட்சத்திரம் மாலை 06.25 வரை. பின் ரேவதி.
இராகு காலம் 03.04 - 04.34 வரை. சுபநேரம் 10.34 - 12.04 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சக ஊழியர்களுடன் நல்லுறவைப் பேணுதல், காரியம் சுலபமாக கைக்கெட்டுதல். |
| ரிஷபம் | உதவிபெற்ற பின் கைவிட்டு விடல், முழவு என்னவாகுமோ என்ற பதகளிப்பு ஏற்படல். |
| மிதுனம் | பலவேலைகளிலும் ஈடுபட முயல்தல், இடமாற்றம் கிடைத்தல். |
| கடகம் | கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுதல், நண்பரின் பேருதவியினால் இடர்பாடு நீங்கிவிடல். |
| சிம்மம் | பகைமை உணர்வு மீண்டும் ஏற்படல், ஏமாற்றம் அற்றுப் போதல். |
| கன்னி | நோய் நீங்க கிரக சாந்திகள் மேற்கொள்ளல், சுபகாரியம் ஒப்பேற கடன்படும் நிலை. |
| துலாம் | உதவப்போய் பழி ஏற்படும் நிலை, நண்பர்களுடன் அரட்டை அடித்தல். |
| விருச்சிகம் | இலாபம் பெற சக ஊழியர் தருணம் பார்த்தல், எதிர்பாராது நோய் ஏற்படல். |
| தனுசு | தொழில் கவனம் எடுத்தல், பெற்றோரின் தேகநிலை சரியில்லாமை. |
| மகரம் | பாதுகாப்பு கனகச்சிதமாக இருந்ததால் திருட்டுப் போகாமை, அதிர்ஷ்டத்தை கைவிடாதிருத்தல். |
| கும்பம் | மேலதிகாரிகளின் பாராட்டால் பதவி உயர்வு கிட்டுதல், குற்றத்தை சுமத்துதல். |
| மீனம் | பொருட்சேதம் ஏற்படல், வாக்கு வாதத்தினால் ரகளை தோன்றுதல். |

# 7 இலட்சம் ரூபா பணத்தை நம்பி 60 ஆயிரத்தை இழந்தார் நபர்

## நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி கரவெட்டி கிழக்குப் பகுதியில் கையடக்கத்தொலைபேசி மூலம் பணத்தொகை கிடைத்துள்ளதாக பொய்த் தகவல் கூறி 60 ஆயிரம் ரூபாவை நபர் ஒருவர் இலாவகமாக பெற்ற சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் வசிக்கும் கந்தசாமி விஜிதரன் என்பவருடைய கையடக்கத்தொலைபேசிக்கு நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் ஒருவர் அழைப்பினை ஏற்படுத்தி தான் பிரபல கையடக்கத் தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்திலிருந்து கதைப்பதாகவும் தங்களுக்கு 7 இலட்சம் ரூபா பணப்பரிசு கிடைத்துள்ளதாகவும் இதனை யாரிடமும் தெரியப்படுத்த வேண்டாம் எனக் கூறியதுடன் உடனே 60 ஆயிரம் ரூபா (ezcash) ஈசிகாஸ் மூலம் அனுப்பிவைக்குமாறும் பிற்பகல் 6 மணியளவில் பரிசுத்தொகையை பெறமுடியும் எனவும் கூறியுள்ளார்.

இதனைக் கேட்ட விஜிதரன் என்பவர் பல பேரிடம் கடன் வாங்கி பணத்தை அனுப்பியபின்னர் தனக்கு வந்த தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்த முற்பட்டவேளை அவ் இலக்கம் பாவனையில் இல்லை என்பது தெரியவந்தது.

இதன் பின்னரே யாரோ தன்னை ஏமாற்றியுள்ளமை விஜிதரனுக்கு தெரியவந்த நிலையில் அவர் இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பணத்தை இழந்த நபர் முன்னரே குறித்த தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கதைத்திருந்தால் ஏமாற்றமடைந்திருக்க வேண்டிய தேவையில்லை எனவும் இது தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன செயற்படவேண்டும் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (18)

# முழுநிலா முத்து நூல் பாடசாலைகளுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட முழுநிலா முத்து கலைவிழா தொகுப்பு மலர் தற்போது பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மலரில் வடமாகாணத்திலுள்ள 12 வலயங்களதும் முழுநிலா கலை நிகழ்வுகளின் தொகுப்பும், பாடசாலைகளின் அழகியல் ஆசிரியர்களின் ஆளணியினரது ஆக்கங்களும், ஓய்வுபெற்ற கலை ஆர்வலர்களின் ஆக்கங்கள், கட்டுரைகள், ஆய்வுரைகள், கவிதைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் புலம்பெயர் வாழ் கலைஞர்களினதும் ஆக்கங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 1000 வரையான பிரதிகள் பதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவை சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)

# புகையிலைச் செய்கையில் பொலிகண்டி விவசாயிகள்

வடமராட்சி பொலிகண்டி கிராமத்தில் புகையிலைச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இம்முறை தாம் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் செய்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பொலிகண்டி கிராமத்தின் கரையோரத்தை அண்மித்ததாக விளாத்தியடி, எழுபுலியடி, ஆழக்கிணற்றடி, பத்திரகாளி கோவிலடி, உப்புக்கிணற்றடி, பாலாவி போன்ற உள்ளகப் பகுதிகளில் புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரதேச விவசாயிகள் கடந்த வருடத்தைவிடவும் இம்முறை குறைந்தளவிலேயே செய்கையில் ஈடுபட்டுள்ள நிலையில் இம்முறை போதிய மழை வீழ்ச்சியின்மையால் செய்கையாளர்கள் காலபோகம் பிந்தியே செய்கையில் ஈடுபட்டுள்ளனா. எனினும் இம்முறை அதிக விளைசலை தாம் எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (116)







# 20 வருடங்களின் பின் தொடரை வென்ற பாகிஸ்தான்

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 356 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றுள்ளதுடன் இருபது வருடங்களின் பின்னர் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் அபுதாபியில் நேற்று நிறைவடைந்தது. முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.

309 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 57 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களைப் பெற்றது விரைவாக சதம் கடந்த வீரர் என்ற சிறப்பைப் பெற்றார்.

பதிலுக்கு 603 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி முதல் விக்கெட்டை 19 ஓட்டங்களைப் பெற்ற வேளை பறிகொடுத்தது. தொடர்ந்து சீரான இடைவெளியில் ஆஸி. அணி விக்கெட்டுக்களை பறிகொடுத்து. ஒரு கட்டத்தில் 101 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த ஸ்ரீபன் ஸ்மித், மிச்சல் மார்ஷ் இணை பொறுப்புடன் ஆடியது. இந்த ஜோடி 107 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை (மார்ஷ்) பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு முனையில் பொறுப்புடன் போராடிய ஸ்மித் ஆட்டமிழந்து ஏமாற்றியதுடன் சதம் அடிக்கும் வாய்ப்பைக் கோட்டைவிட்டார். நிறைவில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் 204 பந்துகளை எதிர்கொண்ட ஸ்ரீபன் ஸ்மித் 12 பவுண்டரிகள் அடங்கலாக 97, டேவிட் வோர்னர் 58, மிச்சல் மார்ஷ் 130 பந்துகளை எதிர்கொண்டு 47, ஹடின் 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஒட்ட எண்ணிக்கையுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பாபர் ஐந்து, சகா மூன்று, மொகமட் ஹபீஸ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 356 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி 1994ஆம் ஆண்டுக்கு பின்னர் அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக கப்டன் மிஸ்பா உல் ஹக், தொடர் நாயகனாக யுனிஸ்கான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, ஒரு நாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் அவுஸ்ரேலிய அணியிடம் அடைந்த தோல்விக்கு டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதன் மூலம் பாகிஸ்தான் அணி தக்க பதிலடி கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் ஜோகோவிச் வசம் கிண்ணம்



(பாரிஸ்)

மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

பாரிசில் ஆண்களுக்கான மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச், தரவரிசையில் 10ஆவது இடத்திலுள்ள கனடாவின் ரவோனிச்சை எதிர் கொண்டார். முதல் செட்டை 6-2 என கைப்பற்றிய ஜோகோவிச், இரண்டாவது செட்டையும் 6-3 என தன்வசப் படுத்தினார். ஒரு மணி நேரம் 23 நிமிடங்கள் நீடித்த போட்டியின் முடிவில், ஜோகோவிச் 6-2, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கோப்பை வென்றார்.

இவ்வெற்றியின் மூலம், ஜோகோவிச் ஏ.டி.பி., ரென்னிஸ் அரங்கில் 600ஆவது வெற்றியை பதிவு செய்தார். இந்த இலக்கை எட்டிய ஐந்தாவது வீரர் என்ற பெருமை பெற்றார். இதற்கு முன் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் (991), ஸ்பெயினின் நடால் (706), அவுஸ்ரேலியாவின் ஹெவிட் (611), ஸ்பெயினின் டேவிட் பெரர் (602) இந்த மைல் கல்லை கடந்தனர்.

இதன் இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் தரவரிசையில் முதலிடத்திலுள்ள அமெரிக்காவின் பொப், மைக் பிரையன் ஜோடி, போலந்தின் மார்சின், ஆஸ்திரியாவின் ஜூர்ஜன் ஜோடியை சந்தித்தது. முதல் செட்டை 7-6 என கைப்பற்றிய பிரையன் ஜோடி, இரண்டாவது செட்டை 5-7 என பறிகொடுத்தது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் சூப்பர் டை பிரேக்கரில் அசத்திய பிரையன் ஜோடி 10-6 என தன்வசப்படுத்தியது. முடிவில் பொப், மைக் பிரையன் ஜோடி 7-6, 5-7, 10-6 என வெற்றி பெற்று கோப்பையை தட்டிச்சென்றது.

# கப்டன் பதவிக்கு குறிவைக்கும் ஹோலி

(கட்டாக்)

நான் எப்போதுமே கப்டன் பதவியை விரும்புகிறேன். இந்தப் பதவிமூலம் போட்டிகளில் என்னை சோதித்துக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. சவால்களை சந்திப்பதில் நான் உண்மையில் மகிழ்ச்சி அடைபவன் என இந்திய அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.


டோனியிடம் இருந்து நான் ஏராளமான விடயங்களை கற்று இருக்கிறேன். இக்கட்டான சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்வது பற்றி அவரிடமிருந்து கற்றேன்.

எனது துடுப்பாட்ட நுணுக்கம் குறித்து விமர்சனம் செய்தவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இதே துடுப்பாட்ட நுணுக்கத்தில் தான் நான் 26 சதம் அடித்துள்ளேன். உலக கோப்பை போட்டியில் இடம்பெற இலங்கை தொடர் வீரர்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹோலி; இந்தியாவின் எதிர்காலம்

ஹோலி ஒரு சிறந்த வீரர். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை விளையாடி வருகிறார். எல்லோருக்கும் ஒரு மோசமான நிலை வரும். அந்த சமயத்தில் அவரை குறி வைத்து விமர்சிப்பது தவறு. இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம் ஹோலி தான். இலங்கை தொடரில் அணித்தலைவராக களமிறங்கியுள்ள ஹோலி, இந்த தொடரில் பல விடயங்களை கற்றுக் கொள்வார். உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்படுவார் என இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

# குத்துச் சண்டை வீரருக்கும் சிறு வயதில் நேர்ந்த கொடுமை



அமெரிக்காவின் முன்னாள் குத்துச்சண்டை வீரர் மைக் டைசன், தான் சிறு வயதில் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வானொலி ஒன்றுக்கு பேட்டியளித்த மைக் டைசன், தனக்கு வயதான ஆண் ஒருவரால் நேர்ந்த பாலியல் தொல்லை குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், எனக்கு 7 வயதிருக்கும். நான் நியூயோர்க் நகர தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது வயதான ஆண் ஒருவர் திடீரென என்னை இழுத்துச் சென்று பாலியல் புணர்ச்சிக்கு ஆளாக்கினார்.

இதனால் நான் அதிர்ச்சியடைந்தேன். இந்தச் சம்பவம் குறித்து நான் பொலிஸில் புகார் அளிக்கவில்லை. இத்தனை காலமாக அது மறைக்கப்பட்ட உண்மையாகவே இருந்தது. நான் அந்தச் சம்பவத்தை மறந்துவிட்டு எனக்கான வாழ்க்கையை வாழத்தொடங்கினேன் என்று தெரிவித்துள்ளார்.

## தொடரை வெல்வோம்

கட்டாக் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்ற வகையில் இருந்தது. ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் சரியாக ஆடாததால் இந்திய அணிக்கெதிரான 1ஆவது போட்டியில் மிகவும் மோசமாக தோற்றோம். எங்களது பந்துவீச்சும் அனுபவம் இல்லாமல் இருந்தது. அவர்கள் நிறைய பாடம் கற்கவேண்டும். பிடிகளைத் தவறவிட்டதும் அணிக்கு பாதிப்பாக இருந்தது.

இந்திய அணியை எப்போதுமே அதன் சொந்த மண்ணில் சந்திப்பது சவாலானதே. தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டு தொடரை வெல்ல முயற்சிப்போம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

# கப்டன் பதவியால் விரக்தி; மனம் திறக்கும் சச்சின்

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் பதவியில் இருக்கையில் மிகுந்த மனவேதனைக்கும், விரக்திக்கும் ஆளானதாக சச்சின் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கர் பிளையிங் இட் மை வே (எனது வழியில் விளையாடுகிறேன்) என்ற பெயரில் சுய–சரிதை எழுதியுள்ளார். வருகிற ஆறாம் திகதி இந்த சுயசரிதை புத்தகம் உலகம் முழுவதும் வெளியிடப்படுகிறது.

இது தொடர்பாக சுயசரிதையில் டெண்டுல்கர் கூறியிருப்பதாவது, கப்டன் பதவி எனக்கு எந்த வித மகிழ்ச்சியையும் அளிக்கவில்லை. அணி தோல்வி அடையும் போது நான் கப்டன் பதவியை வெறுத்தேன். தோல்விக்கு நானே பொறுப்பு என்ற முறையில் அதிக கவலைக்கும் ஆளானேன். நான் எனது முழுத் திறமையையும் பயன்படுத்தியும் தோல்வி நிலையை மாற்ற முடியவில்லை. இது எனக்கு கடுமையான மன வருத்தத்தை அளித்தது. இதனால் எனது ஆட்டமும் பாதிப்புக்குள்ளானது.

கப்டன் பதவியில் ஏற்பட்ட மோசமான தோல்வியால் கிரிக்கெட்டை விட்டே விலகி விடலாமா? என்றும் நினைத்தேன். மிகவும் நெருக்கமாக வந்து போட்டியில் தோற்றது விரக்தியை அளித்தது. இது மாதிரியான தோல்வி சோகத்திலிருந்து விடுபட நீண்ட நாட்கள் பிடித்தன. இந்த தோல்வியால் ஏற்பட்ட அச்சத்தை எனது மனைவியிடம் தெரிவித்தேன். கப்டன் பதவியில் ஏற்பட்ட தோல்வியால் விரக்தி அடைந்து பதவியை துறக்க முடிவு செய்தேன்.

1997ஆம் ஆண்டில் எனது தலைமையில் மே.தீவுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகையில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டியை சமன் செய்தோம். பார்படோசில் நடந்த 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 2ஆவது இன்னிங்ஸில் 120 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெற்று விடலாம் என்ற நிலை இருந்தது. இந்தப் போட்டியை வென்று தொடரைக் கைப்பற்றி விடலாம் என்று நம்பிக்கையுடன் இருந்தேன்.

ஆனால் அந்த இனிங்ஸில் எமது அணி 81 ஓட்டங்களுக்குள் சுருண்டு தோல்வியை தழுவியது. மோசமான துடுப்பாட்டத்தால் தோல்வியை சந்தித்தோம். இந்தத் தோல்விக்காக நான் யாரையும் குற்றம்சாட்ட விரும்பவில்லை. எனது வழியில் எதுவும் சொல்லவில்லை. அந்த ஆட்டத்தில் லக்ஸ்மன் மட்டுமே இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை எட்டினார். நான் 4 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தேன். அந்த தொடர் முழுவதும் தோல்வியின் வலியை உணர்ந்தேன். சோகத்தில் விடுதி அறையை கூட மூடி விட்டு 2 நாட்கள் வெளியில் வராமல் இருந்தேன் எனக் குறிப்பிட்டார்.



படப்பிடிப்பு : சுரேஷ்



சென். ஜோண்ஸ் கல்லூரியினால் ஏழாவது ஆண்டாக நடாத்தப்பட்ட கால்பந்து கானிவேல் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 11 வயதுப் பிரிவு அணிகள் பங்குகொண்ட இக்கால்பந்து கானிவேல் நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த 16 பாடசாலை அணிகள் பங்குகொண்டன. சிறார்களின் கால்பந்து திறனை விருத்தி செய்யும் வகையிலேயே இந்தக் கால்பந்து கானிவேல் நிகழ்வு நடாத்தப்பட்டு வருவதாக சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா தெரிவித்தார். இப்போட்டிக்கு அனுசரணை வழங்கும் சென். ஜோண்ஸ் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் அமரசீலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 20)

## வெற்றிக்கு கைகொடுப்பேன்

(கட்டாக்)

இந்தியாவுக்காக கடந்த 10 ஆண்டுகளாக விளையாடுவதை மிகப் பெருமையாக கருதுகிறேன். ஒவ்வொரு நாளும், சிரேஷ்ட வீரர்கள், பயிற்சியாளர்கள் உள்ளிட்டோரிடமிருந்து நிறைய விடயங்களை கற்றுக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முன், இந்தியாவுக்கு 10 ஒருநாள் போட்டிகள் மட்டுமே இருப்பதால், கூடுதல் கவனம் செலுத்த உள்ளேன். கப்டன் டோனி இல்லாத நிலையில், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு கைகொடுக்க முயற்சிப்பேன் என இந்திய அணியின் அதிரடி வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

## சமபோஷா கிண்ணம்; யாழ். மத்தி வசம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட கால்பந்துப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட பாடசாகைளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரில் அதிகளவிலான அணிகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தின.

விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் அரிய வாய்ப்புக்கள் அமைந்திருந்தபோதிலும் அதனை கோட்டைவிட்டன. இழுபறியில் நிறைந்த முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளால் கோல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்பில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஒரு புறம் போராடிய அதேவேளை, மறுபுறம் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் யாழ். மத்திய கல்லூரி அணியும் செயற்பட்டது. நிறைவில் யாழ். மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சமபோஷா கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள், கால்பந்து நலன் விரும்பிகள், இரசிகர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (93)

## சங்கானை கோட்ட கால்பந்து சம்பியன்கள்

(சங்கானை)

சங்கானை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால் பந்துப் போட்டிகளில் அராலி சரஸ்வதி, அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

சங்கானை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால் பந்துப் போட்டி கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 14, 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் அராலி இந்துக் கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் அராலி இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப்பிடித்துக் கொண்டது.

16 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை அணியும் அராலி இந்துக் கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அணியும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொணடது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அணியும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அணியும் மோதவிருந்தன. இப்போட்டியில் மெய்கண்டான் மகாவித்தியாலய அணி போட்டிக்கு சமூகமளிக்காததன் காரணமாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டதுடன் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டது. (93)

## குட்னஸ் பவுண்டேசன் நிறுவனத்தினால் கிரிக்கெட் உபகரணங்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

குட்னஸ் பவுண்டேன் நிறுவனத்தினால் நான்கு பாடசாலை அணிகளுக்கு கிரிக்கெட் உபரகணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

முரளி நல்லிணக்க ருவெனரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதன் போது பின்தங்கிய பாடசாலைகளின் கிரிக்கெட் தரத்தை மேம்படுத்தும் வகையில் குட்னஸ் பவுண்டேசன் நிறுவனத்தினால் நான்கு பாடசாலைகள் இனங்காணப்பட்டு கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் கிளிநொச்சி மகாவித்தியாலயம், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, மன்னார் சித்திவிநாயகர் பாட-சாலை, வவுனியா விபுலானந்தா மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே மேற்படி கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இவ் உபகரணங்களை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதயபெரேரா, குட்னஸ் பவுண்டேசன் நிறுவன அதிகாரி ஆகியோர் வழங்கினர். இதில் கையுறை, துடுப்பு, தலைக்கவசம் போன்ற கிரிக்கெட் உபகரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்

## இறுதியில் கொலின்ஸ்

(நெல்லியடி)

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொலின்ஸ் அணி முன்னேறியுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அல்வாய் மனோகரா மற்றும் கொலின்ஸ் அணிகள் மோதின. போட்டி ஆரம்பமானது முதல் நிறைவு பெறும் வரை பந்தை தமது கட்டப்பாட்டில் வைத்திருந்த கொலின்ஸ் அணி இடையிடையே கோல்களைப் போட்டுக் கொண்டது. அல்வாய் மனோகரா அணிகோல் அடிக்க எடுத்த அனைத்து முயற்சிகளும் கொலின்ஸ் அணியால் முறிய டிக்கப்பட்டது.

இறுதியில் கொலின்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாகவும், கிண்ணம் வெல்லும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (12)

# கஸ்ட்ரோ - எபோலா - மற்றும் ஐஎஸ்

- சுகு-ஶ்ரீதரன் -




மேற்கு ஆபிரிக்காவில் பல நூற்றுக்கணக்கானோரை காவு கொண்ட எபோலா இன்னும் கட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை.

வறுமை, அறியாமை மற்றும் பின்தங்கல்கள் ஆயுதமேந்திய குழுக்களின் மோதல்கள் சபிக்கப்பட்ட மக்களாக வாழும் மேற்கு ஆபிரிக்க மக்களின் கூட்டம் கூட்டமான மரணத்தை விளைவித்து வரும் எபோலோவைக் கட்டுப்படுத்த ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட தயாராயிருப்பதாக கியூபாவின் தலைவர் பிடல் கஸ்ட்ரோ அண்மையில் தெரிவித்திருந்தார்.

நாம் எபோலாவைத் தோற்கடித்து மேற்கு ஆபிரிக்க மக்களை சாவின் விளிம்பிலிருந்து மீட்க வேண்டும் என்கிறார்.

"புரட்சியாளர்கள் மனித குலத்தின் மீதான பேரன்பினால் வழி நடாத்தப்படுபவர்கள்" என்பார் சேகுவேரா. ஐ.நா.வின் உலகளாவிய கோரிக்கைக்கிணங்க பெருந்தொகையான வைத்தியர்கள் தாதியரை உடனடியாகவே மேற்கு ஆபிரிக்க நாடுகளான லைபீரியா, சியாரா லியோன், கினியா போன்ற நாடுகளுக்கு அனுப்பிவைத்த நாடு கியூபா.

கியூபா இன்றளவில் சர்வதேச சகோதரத்துவத்தை, மாக்சிய அற விழுமியங்களைப் பேணும் நாடு.

கஸ்ட்ரோ எமக்கெல்லாம் பெருமித உணர்வை ஏற்படுத்துகிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவை "கத்தரினா" புயல் தாக்கிய போது உதவிக்கரத்தை நீட்டியவர். அந்த உதவியை அமெரிக்கா நிராகரித்தது.

சதாம் ஹுசேனை பதவியில் இருந்து இறக்கி சுன்னா, சியா முஸ்லிம் மதப்பிரிவுகளின் முரண்பாட்டைக் கையாண்ட அமெரிக்க ராஜதந்திரத்தின் பிரசவமே இஸ்லாமிய அரசு - ஐ.எஸ்.

இன்று ஈராக்கிலும், சிரியாவிலும் இது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

கட்டாரிலும் சவுதியிலும் இந்த இஸ்லாமிய அரசு என்ற வன்முறை டைனோசோரின் டி.என்.ஏக்கள் உருவாக்கப்பட்டபோது அமெரிக்காவிற்கு இது தெரியாதென்று எடுத்துக் கொள்ள முடியாது.

இன்று இது ஐரோப்பிய- அமெரிக்க இளைஞர்கள் சிலரையும் தொற்றிக் கொண்டது, எபோலா போல.

கல்வி சுகாதாரசேவை கட்டணங்களின் உயர்வு, தொழில் இல்லாத அபரிமிதமான இளைஞர் பட்டாளம் உருவாக்கப்பட்டது ஏதென்சிலிருந்து வோல்ஸ்ரீட் வரை கிளர்ச்சிகள் நிகழ்ந்தன.

உலகளாவிய பயங்கரவாதத்திற்கெதிரான போர் இன சமூக மோதல்களுக்கு இட்டுச் சென்றது.

இளைய தலைமுறையின் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு பிரிவினர் இந்த இஸ்லாமிய அரசுடன் இணையும் போக்கு காணப்படுகிறது.

இந்த ஐ.எஸ். ஈராக்கிய சியா பிரிவு மற்றும் குர்திஸ்- சுதந்திர எண்ணங்கொண்ட மக்கள் மற்றும் அறிவிற்கெதிராகச் செயற்படுகிறது.

ஐ.எஸ். தலிபான் போன்றவை எவ்விதத்திலும் சகித்துக் கொள்ளப்பட முடியாதவை.

இவை பற்றி நேரடி அனுபவம் இல்லாத கனடியர்கள் ஒட்டோவா நாடாளுமன்ற கட்டடத்திலும், கியுபெக்கிலும் நிகழ்ந்த சம்பவங்களால் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள்.

காசாவிலும், சிரியாவிலும் நிகழ்பவை நம்மை நோக்கி வராது என்ற மேலைத்தேய வடஅமெரிக்க சிந்தனை வலுவிழந்து வருகிறது.

சுற்றி வர எப்படியும் இருக்கட்டும். புவிக் கோள் எப்படியும் இருக்கட்டும். நாம் எமது வீட்டை ரம்மியமாக வைத்திருப்போம் என்ற கனவு தகர்ந்து வருகிறது.

"எல்லோரும் இன்புற்றிருக்கவே இவ்வுலகு"

இந்த உலகின் இருட்டு மூலைகள் எல்லாம் வெளிச்சம் பாய்ச்சப்பட வேண்டும்.

பட்டினியும், நோயும், யுத்தமும் ஒழிய வேண்டும்.

இவ்விடத்தில் தான் கஸ்ட்ரோ மனிதகுலத்தின் இருப்பிற்காக வாழ்விற்காக பேதங்களுக்கப்பால் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியத்தை வலியுறுத்துகிறார்.

"இது உடலுக்குச் சூடு", "இது குளிர்ச்சி" என்று சிலர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்.

கரட் உடலுக்குச் சூடு தரும் என்றால் நம்ப முடிகிறதா? உடலின் இரத்த ஓட்டத்தைச் சரி செய்யும் கரட், அதேசமயம் உடலின் சூட்டையும் அதிகரித்துவிடுகிறதாம்.

காரம் நிறைந்த இஞ்சி, மிளகாய், வெங்காயம் எல்லாமே உடலின் சூட்டை அதிகரிப்பவை.

வெங்காயத்தை கையின் அக்குளில் சிறிது நேரம் வைத்திருந்தால், உடல் சூடு அதிகமாகிவிடும். காய்ச்சல் அடிப்பதைப் போல இருக்கும்.

யாரும் நம்ப முடியாத இன்னொரு செய்தி, கீரைகளை அதிகமாகச் சாப்பிட்டாலும் உடலில் சூடு அதிகரித்துவிடும் என்பதுதான். பச்சை இலைக் கீரைகளில் அதிகம் புரதம் இருப்பதால், அதை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால் உடலின் வெப்பத்தை அதிகரித்துவிடுகிறது.

## இது என்ன புதுக்கரடி!



# கே.வி. மகாதேவன்



22

- பி.ஜி.எஸ்.மணியன் -

மாடர்ன் தியேட்டரில் கே.வி. மகாதேவனின் இசையில் வெளிவந்த அடுத்த படம் "கைதி கண்ணாயிரம்".

படத்தின் பெயரைச் சொன்னதுமே சட்டென்று நம் உதடுகள் "கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மதி மயக்கும். வஞ்சகரின் உலகம் வலைவிரிக்கும்" என்று முணுக்கத் தொடங்கிவிடுமே.

"கைதி நம்பர் 911" என்ற ஹிந்திப் படத்தின் தழுவல்தான் இந்தப் படம்.

மாடர்ன் தியேட்டர் அதிபர் சுந்தரத்திடம் ஒரு பழக்கம். மக்களுக்கு பழக்கமில்லாத புதிய டியூன்களில் பாடல்களைப் போட்டுவிட்டு அவை மக்களை நல்லபடியாகச் சென்றடைய வேண்டுமே என்று படபடப்புடன் நகத்தைக் கடித்துக்கொண்டு காத்திருப்பது என்பது அவருக்குப் பிடிக்காத ஒன்று. ஆகவே ஏற்கெனவே பிரபலமான டியூன்களிலேயே பாடல்களை அமைக்க அவர் விரும்புவார்.

(அதற்காக புதிய மெட்டுக்களை விரும்பாதவர் என்று அர்த்தம் அல்ல. எல்லாம் ஒரு பாதுகாப்புக்குத்தான்.)

அந்த வகையில் ஹிந்திப் படத்தில் லதா மங்கேஷ்கர் குரலில் இடம் பெற்ற "மீடி மீடி பாட்டின்" என்ற பாடல்தான் தமிழில் பி. சுசீலாவின் தேன்குரலில் "கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மதி மயக்கியது".

பி. சுசீலாவின் தேன்குரலில் பாடலில் தெறிக்கும் வர்ண ஜாலங்கள் பாடிய சுசீலாவுக்கும், பாடலை எழுதிய மருதகாசிக்கும், இசை அமைத்த மகாதேவனுக்கும் நிலைத்த புகழைச் சேர்த்துவிட்டன. படமும் வெற்றி பெற்றது.

"ஆடவந்த தெய்வம்" - டி.ஆர். மகாலிங்கத்தின் சொந்தப் படம்.

இந்தப் படத்தில் பாடல்கள் அத்தனையும் தேன்சொட்டுக்கள். "சங்கம் முழங்க வரும்" என்ற ஒரு பாடல். வழக்கமாக உச்சஸ்தாயியில் கணீர் என்று தெறிக்கும் மகாலிங்கத்தின் குரலை இந்தப் பாடலில் மத்யமஸ்தாயியில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் கே.வி. மகாதேவன். அவருக்கு இணையாக சுசீலாவையும் அருமையாகப் பாடவைத்திருக்கிறார்.

"சொட்டு சொட்டுன்னு சொட்டுது பாரு இங்கே. மழை கொட்டு கொட்டுன்னு கொட்டுது பாரு அங்கே." - மகாலிங்கம் - சுசீலாவின் குரலில் ஒலிக்கும் இந்தப் பாடலில் உற்சாகச் சாரல்கள் தெறிக்கின்றன.

"நிலையாக என் நெஞ்சில்" - என்று சுசீலாவின் குரலில் சோகரசம் ததும்ப இன்னொரு பாடல்.

என்றாலும் படத்துக்கு "தீம் சாங்" என்பார்களே அதுபோல திரும்பத் திரும்ப ஒலிக்கும் ஒரு அற்புதமான பாடல்.

"கோடி கோடி இன்பம் தரவே தேடி வந்த செல்வம்.

கொஞ்சும் சதங்கை கலீர் கலீரென ஆட




வந்த தெய்வம்" - படத்தில் ஒருமுறைக்கு இருமுறையாய் இடம்பெறும் பாடல் இது.

டி.ஆர். மகாலிங்கத்தின் குரலில் ஒரு முறையும், பி. லீலா - பி. சுசீலாவின் குரலில் இன்னொரு முறையும் இடம்பெறும் பாடல் இது.

காஷ்மீர் பிரதேசத்தின் நாட்டுப்புற மெட்டில் இருந்து பிறந்த ராகம் தான் "பஹாடி". அமைதி, ஆற்றல், சோகம், கோபம் ஆகிய ஒன்றுக்கொன்று முரணான உணர்வுகளை துல்லியமாக வெளிப்படுத்தக் கூடிய ராகம் இது. இந்த ராகத்தை வெகு அருமையாக இந்தப் பாடலில் கையாண்டிருக்கிறார் கே.வி. மகாதேவன். பாடல்தான் எவ்வளவு மென்மையாகத், தன்மையாக மறுபடி மறுபடி கேட்கத்தூண்டும் வண்ணம் அமைந்திருக்கிறது!

அறுபதாம் ஆண்டின் இறுதியில் மகாதேவனுக்கு மகத்தான புகழைச் சேர்க்க வந்த படங்கள் இரண்டு.

இரண்டுமே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த படங்கள் தான்.

ஒன்று ஏ.பி. நாகராஜனின் திரைக்கதை வசனத்தில் கே. சோமுவின் இயக்கத்தில் வெளிவந்த "பாவை விளக்கு"

அடுத்தது ஏ. பீம்சிங் அவர்கள் இயக்கத்தில் கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் கதை வசனத்தில் வெளிவந்த "படிக்காத மேதை".

"படிக்காத மேதை" - நடிப்பில் புதிய பரிமாணத்தை காட்டிய சிவாஜிகணேசனின் படம்.

ஒரு இயக்குநராக அறிமுகமான ஏ. பீம்சிங் இயக்கிய ஆரம்ப காலப் படங்கள் எதுவுமே சரியாக அமையவில்லை.

அம்மையப்பன், ராஜாராணி, நானே ராஜா, ஆகிய படங்கள் எல்லாமே ஒன்றன்பின் ஒன்றாக தோல்வியைத் தான் தழுவின. அதன் பிறகு துணிந்து சொந்தமாக புத்தா பிக்சர்ஸ் நிறுவனத்தைத் துவங்கி அவர் ரிஸ்க் எடுத்து தயாரித்த படம் "பதிபக்தி". அதிலிருந்து அவருக்கு ஏறுமுகம் தான்.

அதன் பிறகு அவர் இயக்கத்தில் வெளிவந்த "ப" வரிசைப் படங்களில் இரண்டாவது படம் தான் "படிக்காத மேதை".

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் "ரங்கன்" என்ற ஒரு கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை உள்ளம் கொண்ட மனிதனாக நடித்த - அல்ல - வாழ்ந்து காட்டிய படம். அவருடன் எஸ்.வி.ரங்காராவ், கண்ணாம்பா, சௌகார் ஜானகி, முத்துராமன், அசோகன், சந்தியா, ஈ.வி. சரோஜா ஆகியோரும் நடித்திருந்தனர்.

பீம்சிங்கும் கே.வி. மகாதேவனும் இணைந்த முதல் படம் இது.

கண்ணதாசன், மருதகாசி ஆகியோர் பாடல்களை எழுதி இருந்தனர். பாரதியின் பாடலும் படத்தின் ஒரு முக்கிய திருப்புமுனைக் காட்சிக்கு பயன்படுத்தப் பட்டிருந்தது.

இந்தப் படத்தில் இடம் பெற்ற மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை பத்து.

(தொடரும்)



# தொழுநோய்

Dr.பெலீசியா சிறீசரவணபவானந்தன்
தோல் வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

**நவீன உலகின் பழமையான நோயாகக் கணிக்கப்படும் தொழுநோய்...**

தொழுநோய் என்பது மைக்கோ பக்ரீரியம் லெப்றே எனப்படும் பக்ரீரியாக் கிருமியினால் ஏற்படும் நோயாகும். இது உடலில் அங்க வீனத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு மிகப் பழமையான நோயாகும். கி.மு 4000 ஆண்டளவில் பண்டைய எகிப்திலும் கி.மு 460 களில் கிப்போகிரட்டிஸ் காலத்திலும் இந் நோய் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

இன்று நவீன வசதிகள் உள்ளபோதும் இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. ஏனெனில் இந் நோய் மெதுவாக அறிகுறிகளின்றி ஆரம்பித்து நீண்டகாலத்தின் பின்னரேயே பாதிப்புக்களை ஏற்படுத்துவதாலாகும்.

தொழுநோய்க்கான கிருமியை நோர்வே நாட்டு விஞ்ஞானியான ஹன்சன் என்பவர் 1873ஆம் ஆண்டில் கண்டறிந்ததால் இந்நோயை ஹன்சன் நோய் எனவும் அழைப்பர்.

**தொழுநோய் எவ்வாறு பரவுகின்றது?**

மைக்கோ பக்ரீரியம் லெப்றே எனும் கிருமி 45 நாட்கள் தொடக்கம் 5 மாதங்கள் வரை எமது உடலுக்கு வெளியே தகுந்த சூழலில் உயிர்வாழக்கூடியது. பாதிக்கப்பட்ட நோயாளியுடன் வாழும் மற்றைய சுகதேகியின் மூக்கில் இக் கிருமிகள் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே தொழுநோய்க்கான கிருமி சுவாசிப்பதன் மூலமே பெரும்பாலும் பரவுவதாக நம்பப்படுகின்றது.

**தொழுநோய்க் கிருமி தொற்றியவுடன் காணக்கூடிய அறிகுறிகள்....**

எமது உடல் அதற்கான எதிர்த்தாக்கங்களை உண்டாக்கும். இதன் விளைவாக உடலில் இந் நோய்க்கான அறிகுறிகள் ஆரம்பமாகும். தோலில் குறிப்பிட்ட சில பகுதிகள் உணர்ச்சி குறைந்தும் வெண்மையான தேமல் போன்றும் தோற்றமளிக்கும்.

கிருமிக்கு எதிராக எமது உடலின் எதிர்த்தாக்கங்களின் வீரியத்தைப் பொறுத்து வெவ்வேறுபட்ட அறிகுறிகள் ஏற்படலாம். இத்னை வைத்தே தொழுநோயைப் பல வகைகளாக வகைப்படுத்தியுள்ளார்கள். பின்வருவன முக்கியமான அறிகுறிகளாகும்.

**1.** தொழுநோயின் ஆரம்ப நிலையில் தோலின் சில பகுதிகள் உணர்ச்சியற்றோ அல்லது உணர்ச்சி குறைந்தோ காணப்படலாம். ஒன்று தொடக்கம் மூன்று வரையான தழும்புகள் தெளிவற்ற நிறம் மங்கிய நிலையில் காணப்படலாம்.

**2.** சில சமயங்களில் 1-3 வரையான 0.5 செ.மீ தொடக்கம் 3.0 செ.மீ வரையுள்ள தடிப்பமான வெண்மையான அடையாளங்கள் தோலில் ஏற்படலாம். அதிகமாக முகம், கை, கால்கள், பிட்டப்பகுதிகளில் ஏற்படலாம். இவையும் தொடுகையின் போது உணர்வற்றவையாகக் காணப்படும்.

**3.** சில வகையான தொழுநோயின் போது நோயின் பிந்திய நிலையில் நெற்றி, முகம் என்பவற்றின் தோல்கள் தடிப்படைந்து காதுச் சோணைகளும் தடிப்படைந்து சிங்கத்தின் முகம்போன்று முகம் விகாரமடைந்து காணப்படலாம். கைகால்களில் உணர்ச்சி குறைவடைவதனால் இலகுவில் மாறாத புண்கள் ஏற்படும்.

**4.** தொழுநோயின் போது நரம்புகள் தடிப்படைவதனால் அவற்றைக் கை, கால்களில் தொட்டுணரக் கூடியதாக இருப்பதுடன் நரம்புகளின் பாதிப்பால் கை, கால்களின் உணர்ச்சி குறைவடைந்து இலகுவில் காயங்கள், புண்கள் ஏற்படலாம். சில வேளைகளில் நரம்புகள் மிகப் பாதிப்படைவதனால் திடீரெனக் கை, கால்கள் செயற்பட முடியாமலும் போகலாம்.

**எவ்வாறு கண்டறியலாம்....**

மேற்குறிப்பிட்ட ஆரம்பநிலை அறிகுறிகள் தென்படும் போதே வைத்திய ஆலோசனை பெற்றால் வைத்தியர்கள் நோயாளியைப் பரிசோதித்து தோலின் நிறம் மங்கிய பகுதிகளில் உணர்ச்சிகளைப் பல முறைகள் மூலம் பரிசோதிப்பதன் மூலமும் இன்னொரு வகையாகத் தோலின் உணர்ச்சியற்ற பகுதிகளில் இருந்து ஓர் சிறிய துண்டை எடுத்து நுணுக்குக்காட்டியினூடாக பரிசோதிப்பதன் மூலமும் தொழுநோய் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

**தொழுநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகின்றது....**

தொழுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் சிக்கல்கள் ஏற்படமுன்னரே மருந்துகள் மூலம் இலகுவில் குணப்படுத்த முடியும். அதற்காக தொழுநோய்த்தடுப்பு இயக்கம் அரச வைத்தியசாலைகளினூடாக இலவசமாக மருந்துகளை வழங்குகிறது. இம் மருந்துகளை தொழுநோயின் வகைகளைப் பொறுத்து 6 மாதம் தொடக்கம் 12 மாதம் வரை உட்கொள்ளல் வேண்டும்.

நோய் முற்றிய நிலையில் ஒரு நோயாளிக்கு ஏற்பட்ட அங்கவீனங்களிற்காகப் புனர்வாழ்வுச் சிகிச்சைகள் வழங்கவேண்டிய தேவைகள் ஏற்படலாம். சில சமயங்களில் சத்திர சிகிச்சையும் தேவைப்படலாம்.

**மருந்துகளை உட்கொள்ளும் போது அவதானிக்க வேண்டியவை....**

தொழுநோய்க்காக ஒன்றுக்கு மேற்பட்ட மருந்துகளை உட்கொள்ள வேண்டியுள்ளதனால் அம் மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகளையும் நோய்க் கிருமிகள் அழியும்போது அரிதாக ஏற்படக் கூடிய விளைவுகளையும் அவதானிக்க வேண்டும். பின்வரும் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

1. உடல் வெளிறிக் காணப்படல்.
2. தேநீர் போன்ற நிறமாகச் சலங்கழித்தல்.
3. கண்கள் மஞ்சள் நிறமடைதல்.
4. தோல்களில் ஏற்படும் சிவப்பு நிறமான தழும்புகள்.
5. சத்தி, வயிற்றோட்டம், வயிற்றுநோ போன்ற சமிபாட்டுப் பிரச்சினைகள்.
6. காய்ச்சல்.

**தொழுநோயை ஒரு பிரதேசத்திலிருந்து இல்லாதொழிக்க என்ன செய்யலாம்....**

**1.** சிகிச்சையை தொடர்ச்சியாக அதற்குரிய காலம் வரை இடைநிறுத்தாமல் சரிவரப் பெறவேண்டும்.

**2.** தொழுநோயாளி காணப்பட்ட பிரதேசத்தில் அவருடன் தொடர்பான ஏனையோரையும் பரிசோதிப்பதன் மூலம் ஆரம்பத்திலேயே தொழுநோயாளியைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கல்.

**3.** சுகாதார ஊழியர்கள் தொழுநோய் அதிகமாக உள்ள இடங்களில் நடமாடும் சேவைகளை நடாத்தும் போது அங்குள்ள அனைவரும் அதில் பங்குபற்றித் தங்களுக்குத் தொழுநோய் உள்ளதா என்பதைக் கண்டறிதல் வேண்டும்.

**4.** ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்ட உடனேயே வைத்திய ஆலோசனையைப் பெறல் வேண்டும்.

எனவே தொழுநோயானது இலகுவில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவாவிடினும் அது தொற்றினால் ஒருவருக்கு மிகத் தாமதமாகவே பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பதை மனங்கொள்ள வேண்டும். இதை உணராமல் நோய் முற்றிய நிலையிலேயே பலர் வைத்தியரை அணுகுகின்றார்கள். ஆரம்ப அறிகுறிகளைக் கண்டவுடனேயே வைத்திய ஆலோசனையைப் பெறல் வேண்டும்.

இறுதியாக நாம் மனதில் கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் தொழுநோயைப் பற்றிய பூரண அறிவு எமக்கு இருப்பின் தொழுநோயைப் பூரணமாகக் குணப்படுத்த முடியும் என்பதாகும்.

# ஆயுள்பரியந்தப் பிரேரணைகள்



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....



ஆரப்பா இவர் தவராசா? மாகாணசபையிலை சிறுபான்மை எதிர்க்கட்சிக்காரரான இவர் ஆளுங்கட்சியை நோக்கி எப்பிடிக் கேள்வி கேக்கிறது? இவருக்கு என்ன அருகதையிருக்குது கேள்வி கேக்க? பகிரங்க விவாதத்துக்கு வரட்டாம். நாங்கள் போவமே? எங்களை வலையிலை விழுத்திறதெண்டு இவர் சன்னதம் கொள்ளுறார். நாங்கள் ஓம்படுவமே?

வடக்கு மாகாண சபையை பிரேரணைச் சபையெண்டு கிண்டலடிக்கிறார். எங்களைப் பொறுத்த வரை அது சாதனை தான். சும்மா இல்லை 138 பிரேரணைகளை நிறைவேற்றி இருக்கிறம். அதை நடைமுறைப்படுத்தேல்லை எண்டதுக்கு நாங்கள் பொறுப்பில்லை. அது மிஸ்டர் விக்கி மற்றும் அமைச்சர்களின்ரை பிரச்சினை. அதுக்கு அவைதான் பொறுப்புக் கூற வேணும்.

மற்றது சில பிரேரணையளை நந்தி தடுக்குது. நந்தியெண்டது சிவஞானத்தைத்தான். அது கிழட்டு வயதிலை எல்லாம் எனக்குத்தான் தெரியும் எண்டு கதை விட்டுக் கொண்டிருக்குது.

அடுத்தது முதலமைச்சரே சொல்லிப் போட்டார் அமைச்சர்களுக்கு அனுபவமில்லை எண்டு. அதுகள் பால்குடிப் பிள்ளையள். அதுகள் இப்பதான் மெல்லத் தவழுதுகள். எப்பிடியும் சபையின்ரை ஆயுட்காலம் முடியத்தான் அதுகள் எழும்பி உக்காருங்கள்.

என்னை விடவும் அமைச்சர்களுக்கு அரசியல் அனுபவமில்லை எண்டு கஜதீபனும் சொல்லிப் போட்டார். எனவே பால்குடிப் பிள்ளையளிட்டை கேள்வி கேக்கிற அருகதை தவராசாவுக்கு இல்லை.

மாகாணசபை என்ன செய்தது எண்டு தவராசா கேக்கிறார். 138 பிரேரணை எண்டது ஒரு வருடச் சாதனைதானே! அதை விட மே 19 இலை மாகாணசபையின்ரை சுவரோரமாய் ஒரு தீபம் கொளுத்தினதும் எங்கடை செயற்பாடுதான். இதைப் பொலிசு தட்டி விடாட்டால் வருசம் முழுக்க எரிய விட்டிருப்பம். எரியிற எண்ணெயை வழங்க எங்கடை புலம்பெயர் உறவுகள் தயாராக இருந்ததுகள்.

அதுமட்டுமில்லை அனந்தி அக்கா கைதடியிலையிருந்து கொஞ்சத் தூரமெண்டாலும் சைக்கிளிலை வந்து வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டினதை தவராசா மறக்கக் கூடாது.

மற்றது சிங்கள, முஸ்லிம் உறுப்பினர்களுக்கு வாயால் சாட்டையடி கொடுத்ததும் எங்கடை சாதனைதான். பெரும்பான்மையான சபையிலை வந்து சிறுபான்மை சிங்கள, முஸ்லிம் உறுப்பினர்கள் வாயைக் குடுத்தால் விடுவமே. வடக்கு மாகாண சபையெண்டது தனித் தமிழ்த் தேசிய சபையெண்டதை இவைக்குப் புரிய வச்சிருக்கிறம்.

இன்னொரு விடயம் பிரதேசவாதத்துக்கு இடமில்லை எண்டது. வீடு கட்டிறதெண்டால் அதுக்குப் பொறுப்பான அமைச்சரின்ரை இடத்திலை தான் கட்டலாம். பாதீனியம் எண்டால் அது யாழ்ப்பாணத்திலை மட்டுந்தான். கல்வியை கிளிநொச்சியைத் தாண்டிக் கொண்டு போக முடியாது. முள்ளிவாய்க்காலிலை வீடு கட்ட வேணுமெண்டு ஜெயநாதன் கேக்கிறதை ஏற்க முடியாது. அவைத் தலைவரே சொல்லிப் போட்டார் பிரதேசவாதம் பேச வேண்டாமெண்டு. எனவே பிறக்ரிக்கலாக யோசிக்க வேணும்.

அதுமட்டுமில்லை எங்கடை அமைச்சர்மார்கள் கேள்விக்குப் பதில் சொல்லுறதில்லையெண்டு ஒரு பொலிசியை வச்சிருக்கினை. அது ஒரு ராஜதந்திரச் செயற்பாடு. எனவே, அமைச்சர்கள் அஞ்சு பேரும் கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டினை. பகிரங்க விவாதத்திலை இவர் ஆரிட்டைப் பதில் பெறப் போறார்?

மற்றது நாங்கள் நிறைவேற்றின சில பிரேரணையள் காலம் முழுக்க நிலைத்திருக்கிறவையெண்டதை தவராசா குறிச்சுக் கொள்ள வேணும். வடக்கிலையிருந்து முழுமையாக இராணுவத்தை விலக்க வேணும் எண்ட பிரேரணை அதுக்கு நல்ல உதாரணம். இந்தப் பிரேரணைக்கு எவ்வளவு ஆயுள் உண்டு எண்டது தெரியுமே? இராணுவம் குடியெழும்பும் வரைக்கு இந்தப் பிரேரணைக்கும் ஆயுள் இருக்கும்.

அப்ப தெளிவாய் சொல்லுறம் பகிரங்க விவாதத்துக்கு நாங்கள் வரமாட்டம்.




# சிங்கக்குட்டியின் புது தீபாவளி!

ஒரு நாள் சிங்க ராஜா குடும்பத்துடன் காட்டைச் சுற்றி வலம் வந்தது அப்போது இளவரசர் சிங்கக்குட்டி காணாமற் போய்விட்டது. இளவரசர் சிங்கக்குட்டி வழிதவறி நாட்டுக்குள் நுழைந்தது. இது தெரியாமல் காட்டில் விலங்குகள் இளவரசரைத் தேடிக் கொண்டிருந்தன. அன்றைக்குத் தீபாவளி. எங்கு பார்த்தாலும் மனிதர்கள் பட்டாசுகளை வெடிக்கச் செய்து மகிழ்ச்சியாக இருந்தார்கள். நம்ம இளவரசர் சிங்கக் குட்டிக்கோ பட்டாசு சத்தம் பயத்தை உண்டாக்கியது.

இதற்கு முன்பு இதுபோன்ற சத்தத்தை அது கேட்டதே இல்லை. அதனால், ஒருவித பயத்துடன் எங்கு



செல்வது எனத் தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்தது. சிங்கக்குட்டியின் புது தீபாவளி அஞ்சி நடுங்கிக்கொண்டு ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றது. அப்போது அந்த வழியாக வந்த தெரு நாய் ஒன்று, சிங்கத்தை அடையாளம் கண்டுவிட்டது.


என்ன சிங்கக்குட்டி! நாட்டில் தீபாவளியை வேடிக்கை பார்க்கக் காட்டில் இருந்து வந்துவிட்டீரோ என்று கேட்டபடிசிரித்தது.

தெருநாயைப் பார்த்த சிங்கக்குட்டி, முதலில் பயந்தது. பிறகு அதன் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் தைரியம் பெற்றது. 'இல்லை, இல்லை' நான் வேடிக்கை பார்க்க வரல நண்பா.

வழி தவறி நாட்டுக் குள்ள வந்துட்டேன். தீபாவளி என்றால் என்னான்னே எனக்குத் தெரியாது. இங்கே எங்கு திரும்பினாலும் சத்தம் காதைப் பொளக்குதே இதுதான் தீபாவளியா? எனக் கேட்டது.

என்ன.. சிங்கக்குட்டியாரே! இந்தச் சத்தத்திற்கா பயந்துவிட்டீர். இது பட்டாசு சத்தம். தீபாவளி நாட்டுக்குள் நடக்கும் முக்கியமான பண்டிகை. இதை மனிதர்கள் ரொம்ப ஜாலியாகக் கொண்டாடுவார்கள். ஊசிப் பட்டாசு, சரவெடி, புஸ்வாணம், சங்கு சக்கரம் எனப் பல பட்டாசு, மத்தாப்புகளை கொளுத்தி மகிழ்ச்சியடைவார்கள்.

சில சமயம் சிறுவர்கள் எங்களைப் போன்ற அப்பாவி பிராணிகளின் வாலில் பட்டாசுகளைக் கட்டி, அதை வெடிக்கச் செய்தும் மகிழ்வார்கள் என்றது தெருநாய். நண்பா!





தீபாவளி பத்தியும், பட்டாசு குறித்தும் சொன்னதற்கு ரொம்ப நன்றி. நான் காட்டுக்குச் செல்ல வழி சொல்ல முடியுமா? என்று கேட்டது சிங்கக்குட்டி.

சரி! வாருங்கள் வழி காட்டுகிறேன் என்று கூறி, காட்டின் வாசல் வரை கொண்டுவந்து விட்டது நாய்.இளவரசரைக் காணாமற் பதறிப் போயிருந்த விலங்குகள், காட்டின் வாசலில் இளவரசரைக் கண்டவுடன் ஓடிவந்து அணைத்துக் கொண்டன. சில விலங்குகள் அரசருக்குத் தகவல் கூற விரைந்தன.சிங்க ராஜாவும் விரைந்து வந்தது. இளவரசரைக் கண்டதும் மகிழ்ந்தது. தீபாவளி, பட்டாசு பற்றி இளவரசர் கூறியதைக் கேட்டுச் சிங்க ராஜா வியந்தது.

'அப்பா! இந்த ஆண்டு நாமும் தீபாவளி பண்டிகையைக் காட்டில் கொண்டாடலாமா?' என்று கேட்டது இளவரசர் சிங்கக்குட்டி. "அப்படியே ஆகட்டும்" என்றது சிங்கராஜா.காடே விழாக்கோலம் பூண்டது. எங்கு பார்த்தாலும் தோரணங்கள் கட்டப்பட்டுப் புதுக் காடாக மாறியிருந்தது.

வெளியூர் சென்றிருந்த பறவைகள் பயணத்தை முடித்து, காட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. காட்டை நெருங்கியதும் தோரணங்களைக் கண்டன. நண்பர்கள் மூலம் செய்தியை அறிந்துகொண்டன. நேராக சிங்கராஜாவை சந்திக்கக் குழுவாகப் பறந்தன. அரசே! வணக்கம். நாங்கள் ஊர்ஊராகப் பயணம் செய்பவர்கள். நிறைய ஊர்களில் தீபாவளி கொண்டாட்டங்களைப் பார்த்திருக்கோம். நம் காட்டில் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடப் போவதாக அறிந்தோம், சந்தோஷம். அத்துடன் வருத்தமும் அடைகிறோம் என்றன வேதனையுடன்.

என்ன பறவைகளே! மகிழ்ச்சி என்கிறீர்கள். கூடவே வருத்தம் என்றும் கூறுகிறீர்கள். எனக்குப் புரியும்படி கூறுங்கள் என்றது சிங்கராஜா.

அரசே! தீபாவளி பண்டிகையை நாம் தாராளமாக அதாவது புது உடை, பலகாரங்கள் செய்து கொண்டாடலாம். ஆனால் பட்டாசுகள் வேண்டாமே என்றது ஒரு பறவை. எதற்காகப் பட்டாசுகள் வேண்டாம் எனக் கூறுகிறீர்கள் என்று கேட்டது சிங்கராஜா.

அரசே! பட்டாசுகள் வெடிக்கும்போது, அதிலிருந்து வெளியேறும் நச்சுப் புகை, காற்று மண்டலத்தில் கலந்துவிடும். முயல், முள்ளம்பன்றி போன்ற சிறிய விலங்குகளுக்கும், சிட்டுக்குருவி, தேன்சிட்டு போன்ற பறவைகளுக்கும் மூச்சு திணறலை ஏற்படுத்தும். பட்டாசு சத்தம் ஒலி மாசை ஏற்படுத்தும். அதனால்தான் எங்களைப் போன்ற பறவைகள் கூடும் கிராமங்களில் பறவைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மனிதர்கள் பட்டாசு கொளுத்தாமல் தீபாவளியைக் கொண்டாடு கிறார்கள் என்றது. ஓ! அப்படியா? பட்டாசில் இவ்வளவு பெரிய தீங்கு இருக்கிறதா? இளவரசர் ஆசைப்பட்டதால்தான் நான் ஒப்புக்கொண்டேன் என்றது சிங்கராஜா.

அப்பா! பலருக்குத் தொந்தரவு தரும் பட்டாசை வெடிக்காமல், "ஓசையில்லா தீபாவளி" யைக் கொண்டாடலாமே என்றது இளவரசர் சிங்கக் குட்டி.

அப்படியே ஆகட்டும் என்றது சிங்கராஜா.மகிழ்ச்சியில் சிறகைப் "படபடவென" அடித்தன பறவைகள்.

# இனநல்லுறவுக்கான ஒன்றுகூடலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும்

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம்களின் மக்கள் பணிமனையின் ஏற்பாட்டில் முஸ்லிம்களின் இடம் பெயர்வு நடைபெற்று 24 ஆவது வருட நிறைவுதின நிகழ்ச்சியாக இன ஒற்றுமைக்கான ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் மக்கள் பணிமனையின் தலைவர்.சுபியான்மௌலவி வரவேற்புரையையும் இந் நிகழ்வின் நோக்கத்தையும் தெளிவுபடுத்தி தலைமையுரையையும் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர், யாழ்.நாவாந்துறை பங்குத்தந்தை வணபிதா. ராஜசிங்கம் ,யாழ்.ஓட்டுமடம் மெதஸ்டிஸ்த தேவாலய பிரம போதகர் வணபிதா.தேவசீலன் ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியர் ஏ.பைசர் மௌலவி ஆகியோர் இன நல்லுறவு மேம்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தி கருத்துரைகளை முன்வைத்தனர்.

இதன் பின்பு நல்லிணக்கத்திற்கான சவால்கள், நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகள், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள், குழு உருவாக்கத்தின் அவசியம் என ஒவ்வொரு தலைப்பிலும் சமூகம் தந்திருந்த முஸ்லிம் பள்ளிவாசல் நிர்வாகிகள், பிரமுகர்கள் மற்றும் ஏனைய மத, இன தொண்டர்கள் சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கல்லூரி அதிபர்கள் மற்றும் பிரமுகர்களாலும் ஆரோக்கியமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும் இதில் தமிழ் முஸ்லிம் மற்றும் அனைத்து சமூக மக்களிடையே உரையாடல்களை ஏற்படுத்தி ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் சமய, சமூக இன நல்லுறவுக்கான செயலணி என்ற அமைப்பை ஏற்படுத்தி மதத் தலைவர்களை போசகர்களாக கொண்டும் ஏனையவர்களை பொதுக்குழுவாக இணைத்து செயற்படுவது என தெரிவிக்கப்பட்டது.

இதன்படி நிறைவேற்றப்பட்ட செயற்றிட்ட தீர்மானங்களாக,

பரஸ்பர அங்கீகாரம், கௌரவம், ஒத்துழைப்பு, சமத்துவம், சகோதரத்துவம், சமஉரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ் ,முஸ்லிம் மற்றும் இன மக்களிடையே ஐக்கியம் கட்டியெழுப்பப்பட நடவடிக்கை எடுத்தல், இனங்களிடையே சமத்துவம், சகோதரத்துவம், உருவாகுதலை வலியுறுத்தும் வகையில் கல்வி, கலை, பண்பாடு மற்றும் அரசியல் வரலாறு அமைவதை உறுதி செய்யும விதத்தில் நடவடிக்கைகளை அடிமட்டத்திலிருந்து மேற்கொள்ளல், தமிழ், முஸ்லிம் மற்றும் இடம பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேறி வாழ்வதற்கான வழி வகை களைக் காணுதலும் அதற்காக உழைத்தலும், யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்க்கப்பட்ட முஸ்லிம் மக்கள் தமது இடங்களுக்கு மீள் வருவதற்கு நம்பிக்கையை கட்டியெழுப்புதலும் அவர்களை அதற்காக தம்மை தயார்ப்படுத்துவதற்கும் உதவுதல், அரச நிறுவனங்கள் வெகுஜன அமைப்புக்கள், சமூக சேவை இயக்கங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் தூதரகங்கள் போன்றவற்றுடன் இது தொடர்பாகப் பேசுதல், தமிழ், முஸ்லிம் மற்றும அனைத்து மக்களும் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதற்கு வேண்டிய சூழலை உருவாக்குதல், இன நல்லுறவின் அவசியத்தை வலியுறுத்தி எழுத்துக்கள், சந்திப்புக்கள், பொதுக் கூட்டங்களை நடாத்துதல், போன்ற தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன

# மோட்டார்சைக்கிள்கள் வழங்கப்பட்டும் அதனை பயன்படுத்த முடியாதநிலை

## - விசனமடையும் அரச ஊழியர்கள் -


(அச்சுவேலி)

அரசஊழியர்களுக்காக ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் வீதியில் செலுத்த முடியாத நிலையில் வீடுகளுக்குளளேயே பூட்டி வைத்திருப்பதால் தமக்கு எந்தப் பயனும் இல்லை என சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் மிகுந்த கவலையுடன் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் அவற்றிற்கான பதிவுச் சான்றிதழ்கள் உரிமையாளர்களின் கைகளில் கிடைக்கப்பெறாமையினால் அவ் மோட்டார் சைக்கிளிற்கான வரிப்பத்திரத்தினையோ அல்லது காப்புறுதிச் சான்றிதழினையோ பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அடுத்து என்ன செய்வது என்ற தடுமாற்ற நிலையில் தாம் காணப்படுவதாகவும் தெரிவிக்கும சம்பந்தப்பட்ட அரச ஊழியர்கள் தமது மோட்டார் சைக்கிள்களை வீதிகளில் செலுத்துவதற்கு தகுந்த ஓர் நடைமுறை ஏற்பாட்டினை ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன் வைத்துள்ளனர்.

மேலும் அவற்றிற்கான பதிவுச் சான்றிதழ்கள், மற்றும் காப்புறுதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளையும் தெளிவு படுத்த வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (03)

# உதவிபெறும் பயனாளிகளுக்கான முதற்கட்ட கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்துக்கு அமைய வடமராட்சி வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கிராம அலுவலக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வாழ்வாதார உதவி பெறுவோருக்கான முதற்கட்ட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயக கட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் கரையோர இணைப்பாளர் இரட்ணகுமார் மற்றும் யாழ. மாவட்ட கடற்றொழில் நீரியலவளத்துறை பணிப்பாளர் கணேச மூர்த்தி ஆகியோரும் பயனாளிகளும் கலந்து கொண்டனர். (40)

# பதிவிறக்கப் பெட்டகம்

## ஜெயமோகனின் 'கன்னிநிலம்' நாவலில் இருந்து...

"ஏன் இந்த சண்டைகள்? எதற்காக இப்படி சுட்டுக்கொண்டு சாகிறோம்?"

அவள் ஏதோ சொல்ல வந்தாள். நான் மேலும் சீற்றம் கொண்டேன் "...வேண்டாம். அந்த ஐடியோலஜி ஷிட் எல்லாம் என்னிடம் சொல்லாதே. சித்தாந்தம், மதம், தேசம், கொள்கை... ஷிட்... மனிதனை மனிதன் சுட்டுத்தள்ளுவதற்கு எத்தனை காரணங்கள். எத்தனை ஆயுதங்கள்..."

"நான் இதுவரை எட்டு சண்டைகளைப் பார்த்துவிட்டேன். என் அம்மா குண்டுபட்டு சிதறிக்கிடந்ததையும் கண்டேன்." அவள் சொன்னாள்: "நானும் நினைப்பேன். போரே இல்லாத இடம் உண்டா என்று. பயமே இல்லாமல் வாழக்கூடிய இடம்!"

"இருக்கிறது. நமக்கு ஆயுதங்களை உருவாக்கி விற்கக்கூடிய நாடுகள். பார்த்தாயா இந்தத் துப்பாக்கி. அமெரிக்கக் கம்பனி. இந்தக் கம்பனியில் ஷேர் வாங்கியவர்களெல்லாம் நிம்மதியாக இருப்பார்கள். ஹொலிடேக்கு மியான்மாருக்கும் இந்தியாவுக்கும் வந்து கலைப்பொருட்கள் வாங்குவார்கள்..." நான் உரக்கச் சிரித்தேன்.

*** *** ***

"நெல், நாம் மிக அதிகமாக சந்தோஷப்படுகிறோம். அதிகம் சிரித்தால் அதிகம் அழுவோம் என்று பாட்டி சொல்வாள்."

"எல்லா ஊரிலும்தான் அதைச் சொல்கிறார்கள். மனிதர்களுக்கு சந்தோஷமாக இருப்பதற்குப் பயம்."

"இல்லை நெல், மனிதர்கள் இத்தனை சந்தோஷமாக இருக்க இயற்கை அனுமதிக்காது."

"ஸோ?"

"எனக்கு பயமாக இருக்கிறது... இவ்வளவு இனிமை இவ்வளவு உத்வேகம்... என்னால் தாளமுடியவில்லை. சிலசமயம் நல்ல பாட்டுகளைக் கேட்கும்போது கொஞ்சநேரம் மனம் நெகிழும். கண்ணீர் வரும். அதிகம் போனால் ஐந்து நிமிடம், அவ்வளவுதான்... ஆனால் இப்போது ஒரு இரவும் பகலும் அதே மனநிலையில் இருந்திருக்கிறோம்... இது மனிதப்பிறவிக்கு ரொம்ப அதிகம்..."

"சரியான உளறல்... சக்கரை மிட்டாய் ரொமாண்டிசிசம் என்று இதற்குப் பெயர்."

*** *** ***

"மனிதர்களுக்கு மகிழ்ச்சியே இல்லை. மகிழ்ச்சியாக இருக்க அவர்களுக்குத் தெரியவில்லை. அடையாளங்களையும் துப்பாக்கிகளையும் வைத்திருப்பதுவரை எவருமே உண்மையான மகிழ்ச்சியுடன் இருக்க முடியாது. மகிழ்ச்சியைத் தேடி அது இன்றைக்கு வரும் நாளைக்கு வரும் என்று கனவு கண்டு அவர்கள் உயிர் வாழ்கிறார்கள்."

*** *** ***

"மதூகச் சமவெளிக்குப் போனபிறகு என்ன செய்வேனா... என் உடைகளைக் கழற்றி வீசுவேன், நீங்கள் ஆயுங்களை வீசியதுபோல. ஏவாள் ஆகிவிடுவேன். அதுதான் ஏதன் தோட்டம்." அவள் கையை விரித்தாள். "நெல், நான் பெண் என்று உணர்ந்தபின் ஒவ்வொரு கணமும் உடைகளைப் பற்றிய கவனததுடனேயே வாழ்கிறேன் தெரியுமா?-உடைதான் என் விலங்கு..."

*** *** ***

"என் அம்மா பிறந்ததிலிருந்து இதுவரை சமையற்கட்டிலேயேதான் அதிகமும் வாழ்கிறார்கள். தோசை, இட்லி, சாம்பார், சோறு, குழம்பு இதேதான் வாழ்க்கை. அவளிடம் போன தடவை கேட்டேன், இதெல்லாம் சலிக்கவில்லையா என்று..."

"என்ன சொன்னார்கள்?"

"அவளுக்குப் புரியவில்லை. ஏன் சலிக்க வேண்டும்? என் குழந்தைகளுக்காகத்தானே எல்லாம் செய்கிறேன் என்றாள்." நான் அவள் கண்களைப் பார்த்துச் சொன்னேன்: "அன்பு இருந்தால் எல்லாமே இனிமையாக மாறிவிடும். அன்பு மட்டும்தான் பூமியில் ஒரே அர்த்தம் வாழ்க்கைக்கு."

"காதல்?" என்றாள் குறும்புடன்.

"அன்பை காமத்தில் கலந்து நன்றாகக் கொதிக்க வைத்தால் அதுதான் காதல்."

*** *** ***

எந்த மன்னனின் மறைவும் ஓர் இலையுதிர்வதற்கு அப்பால் ஏதுமில்லை. அவன், அவனறியாத ஏதோ பெரும் சக்தியின் கைப்பொம்மை. அவன் இருக்கும்போது சர்வ வல்லமை கொண்டவனாக ஒரு சொல்லில் பலநூறு உயிர்களை அழிப்பவனாக இருப்பான். ஆனால், சட்டென்று ஒருநாள் உதிர்ந்து போவான். அவனைச் சார்ந்தவர்கள் அனைவருமே உதிர்வார்கள். அவர்களைப் பற்றிய சொற்கள் அனைத்தும் மௌனச்சேற்றில் விழுந்து புதைந்து மறையும். அவனை வரலாறு மறந்து போகும். அவன் வாழ்ந்த நிலத்தில் அவன் தலைமுறை நினைவுகளில் அவன் மொழியில் அவனது தடமே இருக்காது. போர் ஓயாது நீளும், காலங்கள் தோறும் சாவதற்காகப் பிறந்து வந்து கொண்டே இருப்பார்கள். மீண்டும் மீண்டும் வரலாறு அதை நிகழ்த்திக்கொண்டே இருக்கிறது, சலிப்பில்லாமல்...

# பதிவு செய்த இலக்கங்கள் பேருந்துகளில் கட்டாயம்



(கொழும்பு)

பதிவுசெய்யப்பட்ட இலக்கத்தை பேருந்துகளுக்குள் கட்டாயமாக காட்சிப்படுத்த வேண்டும் என தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோத செயற்பாடுகள் ஏதேனும் பேருந்துக்குள் இடம் பெறுமாயின் அது தொடர்பாக பொலிஸ் அவசர பிரிவினருக்கு அறிவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, பேருந்து பதிவு செய்யப்பட்ட இலக்கத்தை பொலிஸாருக்கு வழங்குவதன் ஊடாக விசாரணைகளை துரிதப்படுத்த முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 99 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது இலங்கை

வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள உசிதமான நாடுகளின் வரிசையில் இலங்கை பின்தள்ளப்பட்டுள்ளது. உலக வங்கியின் டுயிங் பிஸ்னஸ் என்னும் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இலங்கை 99 ஆவது இடத்தை வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இலங்கை 85 ஆவது இடத்தை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு பதினான்கு இடங்கள் பின்தள்ளப்பட்டு 99ம் இடத்தை வகிக்கின்றது.

வர்த்தகத் துறையில் ஏதேனும் சட்டத் தேவைகளை நீதிமன்றின் ஊடாக பூர்த்தி செய்து கொள்ள நான்கு ஆண்டு காலம் தேவைப்படுவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

இலங்கையில் வரிச் செலுத்துகை தொடர்பிலும் சிக்கல் நிலைமைகள் காணப்படுவதாக உலக வங்கி அறிவித்துள்ளது. இதேவேளை, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள மிகவும் உசிதமான நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் முதலாம் இடத்தை வகிக்கின்றது.

# தனியாரிடம் இரத்தப் பரிசோதனை செய்யுமாறு திருப்பி அனுப்பும் மன்னார் வைத்தியசாலை

## விசனமடையும் நோயாளர்கள்




(மன்னார்)

மன்னார் பொது வைத்திய சாலையில் பல்வேறு குறைபாடுகள் தொடர்ச்சியாக காணப்பட்டு வரும் நிலையில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு இரத்தப்பரிசோதனைகளுக்காகச் செல்லும் நோயாளர்களை தனியார் இரத்த பரிசோதனை நிலையங்களுக்கு சென்று இரத்த பரிசோதனைகளை மேற்கொண்டு வருமாறு திருப்பி அனுப்பப்படுவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மன்னாரில் வைரஸ் காய்ச்சல் வேமாக பரவி வரும் நிலையில் மூன்று நாட்களுக்கு மேல் தொடர்ச்சியாக காய்ச்சல் காணப்பட்டால் குறித்த நபர் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும்.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திடீர் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்ட பலர் மன்னார் பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற போது இரத்தப்பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் வெளியில் சென்று தனியார் இரத்த பரிசோதனை நிலையங்களுக்குச் சென்று இரத்தப்பரிசோதனையினை மேற்கொண்டு அறிக்கையை கொண்டு வருமாறு வைத்தியர்கள் கூறியதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். இரத்தப் பரிசோதனை செய்யும் இயந்திரம் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் வெளியில் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மன்னார பொது வைத்தியசாலையில் உள்ள குறித்த வைத்தியர்கள் கூறுவதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளியில் இரத்தப்பரிசோதனைகளை மேற்கொள்ள 400 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை பணம் அறவீடு செய்யப்படுவதாகவும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். வறிய மக்கள் குறித்த பணத்தை செலுத்தி எவ்வாறு பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர.

இவ்விடயத்தில் வடமாகாண சுகாதார அமைச்சர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# துன்புறுத்தல்கள் தாங்க முடியாமல் 112 பணியாளர்கள் நாடு திரும்பினர்



(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச்சென்று அந்நாடுகளில் தமது எஜமானிகள் மற்றும் தொழில்புரியும் நிறுவனங்களின் துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளான மேலும் 112 இலங்கையர்கள் கடந்த சனிக்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

தாம் தொழில் பெற்றுச்சென்ற நாடுகளில் தமது எஜமானிகள் மற்றும் தாம் தொழில் புரிந்த நிறுவனங்களில் ஒப்பந்தத்தை மீறும் வகையில் தமக்குரிய சம்பளம் வழங்கப்படாத காரணத்தினால் தாம் நாடு திரும்பியதாக அந்த பணியாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

தாம் தொழில் புரிந்த வீடுகளில் உள்ள எஜமானர்களால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளான நிலையில் தமது உயிரை காப்பாற்றிக்கொண்டு இவர்கள் அனைவரும் நாடு திரும்பியுள்ளனர்.

தமது எஜமானிகளால் பாலியல் வன்முறைகளுக்கு இலக்கானவர்கள், திடீர் விபத்துகளுக்கு உள்ளானவர்கள், பல்வேறு நோய்களுக்கு இலக்கானவர்கள் மற்றும் அந்நாடுகளுக்கு செல்வதற்கு வழங்கப்படும் ஆவணங்கள் இல்லாத நிலையில் அந்நாடுகளின் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களும் நாடு திரும்பியவர்களில் உள்ளடங்குகின்றனர்.

கட்டார் விமானசேவைக்கு சொந்தமான கியூ.ஆர்.662 விமானத்தில் 46 பேர் நாடு திரும்பியதுடன் ஏனையவர்கள் சவுதி அரேபியா, டுபாய் மற்றும் குவைத் ஆகிய நாடுகளிலிருந்து திரும்பிய பெண்கள் ஆவர். திருகோணமலை, அநுராதபுரம், பொலனறுவை, குருநாகல், அம்பாறை மற்றும் ஏனைய கஷ்ட பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

# ஆஸி.கறவை மாடுகள் வட,கிழக்கிற்கும் வரும்



அவுஸ்ரேலியாவிலிருந்து 22 ஆயிரம் கறவை மாடுகளை இறக்குமதி செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்காக சுமார் 1152 கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவின் வெலாட் நிறுவனம் மூலம் இந்தப் பசுக்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தருவிக்கப்படும் கறவை மாடுகளில் சுமார் ஐயாயிரம் மாடுகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை குறிக்கோளாகக் கொண்டு இந்த நடவடிக்கையை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு எடுத்துள்ளது.

தற்போது இலங்கையின் பால் தேவையில் 42 வீதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

எனினும் இந்தக் கொடுக்கல் வாங்கலின் பின்னால் பாரிய பொருளாதார மோசடி இருப்பதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவுஸ்ரேலிய கறவை மாடுகளுக்கு உகந்த பசுமைப் புல் வெளிகள் இலங்கையில் மிகவும் குறைவாகவே இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.


மத்திய மலைநாட்டின் பிரதேசங்களில் கூட போதுமான பசுமைப் புற்தரைகள் இல்லாத நிலையில் இந்தக் கொடுக்கல் வாங்கல் தனிப்பட்ட ஒருவரின் பொருளாதார நன்மை கருதி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# அரச பாடசாலை மாணவருக்கு விரைவில் சீருடைத்துணிகள்


அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைத்துணிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை கல்விச் சேவை கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தேவையான சீருடைத்துணி பொதிகளின் விபரங்களை வலய ரீதியாக உறுதிப்படுத்தும் பணி தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளர் காந்தி பெரேரா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தனியான கடிதங்களை அனுப்பி விபரங்களைப் பெற்றுள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே பாடசாலைகளுக்கு சீருடைத்துணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. ஆகையால் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் தங்களது புள்ளிவிபரங்களை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். இவ்விடயம் தொடர்பில் அவ்வப்போது விடுவிகப்படும் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.




அன்பே சிவம் நிறுவனம் மன்னார் இந்து ஆலயங்களின் ஒன்றியத்திற்குட்பட்ட கள்ளியடி கற்பக பிள்ளையார் ஆலயத்துக்கு தென்னங்கன்றுளை வழங்கி வைப்பதைக் காணலாம்.



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2014


# கல்வி முரசு O/L



## கணிதம்

1) குறித்த உணவு வகை ஒன்றின் 100 கிராமிலிருந்து கிடைக்கும் சக்தியின் அளவு 500 கலோரி ஆகும். அதே உணவு வகையின் 30 கிராமிலிருந்து சக்தியின்அளவு எத்தனை கலோரி?

2) x=2 எனின், $(x-1)\frac{1}{3}(x+1)$ இன் பெறுமானத்தைக் காண்க.




3) உருவில் LMN ஒரு நேர்கோடு $P\hat{M}Q=50^0$ x இன் பெறுமானத்தைக் காண்க.

4) x, y , z என்னும் எண்கள் முதன்மைக் காரணிகளின் பெருக்கங்களாகக் கிழே தரப்பட்டுள்ளன.

x =2x2x3,

y+2x2x5,

Y=2x2x5,


z=2x2x2x2

X.Y.Z ஆகிய எண்களின் பொதுக் காரணிகளுட் பெரியதை எழுதுக.

5) தீர்க்க : (3x + 5) - (x-1) = 2

6) சுருக்குக $\left(\frac{2}{3}-\frac{1}{5}\right)+1\frac{2}{5}$

7) சுருக்குக 0.22 x1.5




8) தரப்பட்டுள்ள வட்டத்தின் மையம் O ஆகும். உருவில் காட்டப்பட்டுள்ளதகவல்களுக்கு ஏற்ப ஆகவும் நீளமான நாண் யாது?

9. L=a + (n-l) d என்னும் சூத்திரத்தில் n ஐ எழுவாயாக்குக.


10) குறித்த பணத்தொகை ஒன்றை A யிற்கும் B யிற்குமிடையே 4:7 என்னும் விகிதத்தில் பிரித்தபோது B யிற்கு ரூ.105 கிடைத்தது. A யிற்குக் கிடைத்த தொகையைக் காண்க.

11) ஒழுங்கான குவிவுப் பல்கோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானம் $135^0$ ஆகும். அப்பல்கோணியின்,


i) பக்கம் ஒன்றை நீட்டும்போது உண்டாகும் புறக்கோணம் ஒன்றின் பெறுமானம்

ii) பக்கங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காண்க.

12) செய்தித்தாள் ஒன்றிலே விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் 15 சொற்களுக்கு ரூ.22.50 உம் அதற்குக் கூடுதலாக ஒவ்வொரு சொல்லுக்கும் ரூ.2.50 உம் அறவிடப்படுகின்றன. 20 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிக் கொடுக்க வேண்டிய தொகையை காண்க.





13) உருவில் உள்ள தரவுகளுக்கு ஏற்ப $A\hat{D}B$ யைக் காண்க




14) தரப்பட்டுள்ள உருவிலே BDC ஒரு நேர்கோடு முக்கோணி ABD யின் பரப்பளவு $6cm^3$ ஆகும். BD = 2 cm, DC =4 cm எனின், முக்கோணி ABC யின் பரப்புளவைக் காண்க.

15) சுருக்குக $\frac{2}{2x-3}-\frac{1}{x}$





16) உருவிலே முக்கோணி PQR இல் உள்வரைந்த வட்டம் முக்கோணியின் பக்கங்களை X,Y,Z என்னும் புள்ளிகளிலே தொடுகின்றன. PX=3 cm, XQ =5 cm RZ=7 cm எனின், முக்கோணி PQR இன் சுற்றளவுகளைக் காண்க.

17) $531_{எட்டு}$ என்னும் எண்ணை அடி இரண்டில் எடுத்துரைக்க

18) $x^2+bx+25$ என்னும் கோவை நிறை வர்க்கமாவதற்கு b கொண்டிருக்க வேண்டிய பெறுமானத்தைக் காண்க.

19) குறுக்குவெட்டு ஒரு செங்கோண முக் கோணியாகவுள்ள செவ்வரியம் ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அதிலே தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப அரியத் தின்





i) குறுக்குவெட்டின் பரப்பளவு

ii) கனவளவு ஆகியவற்றைக் காண்க.

20) குறித்த எண்ணிக்கையான செங்கற்களை லொறிஒன்றில் ஏற்றுவதற்கு நாலு மனிதர் களுக்கு 3 மணித்தியாலம் எடுக்கின்றது. அதே எண்ணிக்கையான செங்கற்களை 2 மணித்தி யாலத்தில் ஏற்றி முடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் தேவை?

21) தரப்பட்டுள்ள உருவிலே ABE யும் DCE யும் இயல்பொத்த முக்கோணிகள்




AB = 8 cm

AE = 6 cm

ED = 9 cm

எனின், CD யின் நீளத்தைக் கணிக்க.

22) 35 சென்ரிமீற்றர் விட்டமுள்ள சில்லு ஒன்று 10 சுற்றுகள் உருண்டது. அச்சில்லு உருண்ட தூரத்தைக் காண்க.

(ஆரை r ஐ உடைய வட்டம் ஒன்றின் பரிதி = 2 πr ஆகும். $\pi = \frac{22}{7}$ எனக் கொள்க)


23) பாத்தி ஒன்றில் உள்ள 10 மிளகாய்ச் செடிகளிலிருந்து குறித்த நாள் ஒன்றில் பிடுங்கிய மிளகாய்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

16, 9, 3, 16, 6, 22, 13, 24, 9, 9

இப்பரம்பலின் (1) ஆகாரம் (ii) இடையம் ஆகியவற்றைக் காண்க.


24) பொருள் ஒன்றை விற்கும்போது குறித்த விலையில் இருந்து 12% கழிவு கொடுக்கப்படுகின்றது. அப்பொருளின் குறித்த விலை ரூபா 450 எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.

25) 8 cm விட்டமுள்ள கோளம் ஒன்று சமதள மேசை ஒன்றின் மீது ஒரு நேர்கோடு வழியே உருட்டப்படுகின்றது. கோளத்தின் மையத்தின் ஒழுக்கைத் தெளிவாக விவரிக்க.




26) உருவில் காட்டப்பட்டுள்ள நேர்கோடு AB யின் படித்திறனைக் காண்க.


27) A.B என்பன தேசப்படம் ஒன்றில் குறிக்கப்பட்ட இரு நகர்வாகும்., B யிலிருந்து பார்க்கும்போது A யின் திசைகோள் $210^0$ எனின், A யிலிருந்து பார்க்கும்போது B யின் திசைகோள் யாது?





28) $\frac{a}{b}=\frac{2}{3}$ எனின், $\frac{a+b}{b}$ யின் பெறுமானத்தைக் காண்க.

29) செங்கோண முக்கோணி ABC யில் $A\hat{B}C = 90^0, C\hat{A}B = \theta$ ஆகும்.

சைன் $\theta = \sqrt{\frac{4}{41}}$ எனின், கோசை வைக் காண்க.




30) உருவில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தை வகைகுறிக்கும் சமனி லிகளை எழுதுக.



# பகுதி II

1)

a) பாறைனில் வேலை செய்யும் ஒரு பெண்ணுக்குச் சம்பளமாக மாதம் 24 பாறைன் தினார் கிடைத்தது.

i) ஒரு பாறைன் தினார் 182 இலங்கை ரூபாய்க்குச் சமமெனின், அப் பெண்ணின் சம்பளம் இலங்கை ரூபாவில் எவ்வளவு

ii) பின்னர் பாறைன் தினாருக்குச் சமானமான இலங்கைக்குப் பெறுமானம் 5% இனால் அதிகரிப்பின் அவர் மாதம் இலங்கை ரூபாயில் எவ்வளவு பணம் கூடுதலாகப் பெறுவார்?

b) ஒருவர் வங்கியிலிருந்து ரூ. 45000 கடன் பெற்றார். அதற்காக வங்கி 20% ஆண்டு வட்டியை அறிவிடும் அதேவேளை முதலையும் வட்டியையும் 24 சம மாதத் தவணைக் கட்டணங்களில் கொடுத்து முடித்தல் வேண்டும்.

i) ஒரு மாதம் கொடுக்க வேண்டிய முதலின் பகுதி எவ்வளவு?

ii) அத்தொகைக்கான ஒரு மாதம் கொடுக்க வேண்டிய வட்டி எவ்வளவு?

iii) வட்டி கொடுக்கப்பட வேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கையை காண்க.

iv) கொடுக்கப்பட வேண்டிய மொத்த வட்டி யாது?

v) திரும்பக் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை யாது?

vi) ஒரு தவணைக் கட்டணத்திற்காகக் கொடுக்க வேண்டிய தொகை யாது?

2) a) காரணிகளைக் காண்க.: $a^2 + 3a - 3 - a$

b) பசு ஒன்றையும் இரு ஆட்டுக்குட்டிகளையும் ரூ.11250 இற்கு வாங்கலாம். அத்தகைய 7 ஆட்டுக்குட்டிகளை வாங்கச் செலவிடும் பணத்திற்கு அத்தகைய பசு ஒன்றை வாங்கலாம்.

i) பசுவின் விலையை ரூ. x எனவும் ஆட்டுக்குட்டி ஒன்றின் விலையை ரூ. y எனவும் கொண்டு மேற்குறித்த தகவல்களைப் பயன்படுத்தி இரு ஒழுங்கமை சமன்பாடுகளை உருவாக்குக.

ii) பசுவின் விலையையும் ஆட்டுக்குட்டி ஒன்றின் விலையையும் காண்க.

c) $\frac{x}{2} - \frac{6}{x} = 6$


3) a) சுருக்குக. (9) 2/3 x 8 1/3

b) X= மட$_{10}$8, Y= மட$_{10}$9/4, Z= மட$_{10}$9/5 எனின் மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல் (x + x -z) இன் பெறுமானத்தைக் காண்க.

c) மடக்கை அட்டவணைகளைப் பயன்படுத்தி,

$\frac{51.42 \times \sqrt{0.0945}}{(2.52)^2}$ இன் பெறுமானத்தை இரு தசம தானத்திற்குத் திருத்தமாகக் காண்க.

4) a) A,B,C ஆகியவற்றினால் ஓர் அகிலத் தொடை ε இன் மூன்று தொடைப்பிரிவுகள் குறிக்கப்படுகின்றன. n(A) = 35, n(B) = 22, n(C) =12, n(AnBnC) = x, n(AnB) = 13, n (BNC) = 5, (CNAA) = 6




i) தரப்பட்டுள்ள வென்வரிப்படத்தை உமது விடைத்தாளில் பிரதிசெய்து மேற்குறித்த தகவல்களை அதில் காட்டுக.

ii) x =2 எனின், n(AUBUC) ஐக் காண்க.

iii) x=2 ஆகவும் n(ε)=50 ஆகவும் இருப்பின், n(AUBUC)\\ஐக் காண்க.

b) பெட்டி ஒன்றிலே ஒரே அளவுள்ள, ஒரே வகையான ஆறு பென்சில்கள் இருக்கின்றன. அவற்றில் இரு பென்சில்கள் சிவப்பு நிறத்தையும் எஞ்சிய நான் பென்சில்களும் நீலநிறத்தையும் உடையன. இப்பெட்டியிலிருந்து பென்சில் ஒன்றை எழுமாற்றாக வெளியே எடுத்து அதனை மறுபடியும் பெட்டிக்குள்ளே இடாமல் அதிலிருந்து வேறொரு பென்சில் எழுமாற்றாக வெளியே எடுக்கப்படு கின்றது.

i) இங்கு மாதிரிவெளியைத் தெக்காட்டுத் தளத்தில் வகை குறிக்க.

ii) வெளியே எடுக்கப்பட்ட பென்சில்கள் இரண்டும் சிவப்பு நிறப் பென்சில்களாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

iii) வெளியே எடுக்கப்பட்ட பென்சில்களில் ஒன்று சிவப்பு நிறப் பென்சிலாகவும் மற்றையது நீல நிறப் பென்சிலாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

5) a) சார்பு $y= x^2+2x - 3$ இன் வரைபை வரைவதற்கான x இனதும் y யினதும் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட் டுள்ளது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 5 | o | --- | --- | --- | 0 | 5 |

i) மேற்குறித்த அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து, அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

ii) தரப்பட்ட வரைபுத் தாளில் x அச்சு வழியேயும் y அச்சு வழியேயும் 10 சிறு சதுரங்களினால் ஓர் அலகு வகை குறிக்கப்படுமாறு உள்ள அளவிடையை எடுத்து மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.

b) உமது வரைபைப் பயன்படுத்தி

i) வரைபின் உச்சியின் ஆள்கூறுகளை எழுதுக.

ii) சார்பின் இழிவுப் பெறுமானத்தை எழுதுக.

iii) சார்பு மறையாக இருக்கும் x இன் பெறுமானங்களின் வீச்சை எழுதுக.

iv) சமன்பாடு $x^2 +3x-2 =0$ இன் மூலகங்களைக் காண்க.

6) நேர்விளிம்பு, கவராயம், cm/mm அளவுகோல் ஆகியவற்றை பயன்படுத்திக் கீழே தரப்பட்டுள்ள தரவுகளுக்குப் பொருத்தமான கேத்திரகணித வடிவத்தை அமைக்க. அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

i) AB = 4.5 cm, BC = CA = 6.5 ஆகவுள்ள இருசமபக்க முக்கோணி ABC யை அமைக்க

ii) B யினூடாக, AC யிற்குச் சமாந்தரமாகக் கோடு ஒன்றை அமைக்க.

iii) அச்சமாந்தரக் கோட்டின் மீது மையம் இருப்பதுவும் B,C ஆகிய புள்ளிகளி னூடாகச் செல்வதுமான வட்டத்தை அமைக்க. அதன் மையத்தை O எனப் பெயரிடுக.

iv) வட்டத்தின் ஆரையை அளந்து அதன் பெறுமானத்தை எழுதுக.


v) CO வைத் தொடுத்து வட்டத்தை P யிலே சந்திக்குமாறு நீட்டுக.

vi) வட்டத்திற்குப் புள்ளி P யிலே தொடலியை அமைக்க.

7) a) முக்கோணி ABC யின் பக்கம் BC ஆனது D வரைக்கும் நீட்டப்பட்டுள்ளது. கோணம் $B\hat{A}C$ யின் இருசுறாக்கியானது BC யை E யிலே, AE = BE ஆக இருக்குமாறு சந்திக்கின்றது.

$A\hat{B}E = A\hat{C}D$ என நிறுவுக.

b) நாற்பக்கல் PQRS இலே $O\hat{P}S$ = SRQ உம் PQ ஆனது SR இற்குச் சமாந்தரமும் ஆகும். கோடு QS ஆனது T வரைக்கும், ST = QS ஆக இருக்குமாறு நீட்டப் பட்டுள்ளது.




i) $P\hat{Q}S$, $R\hat{S}Q$ ஆகிய முக்கோணிகள் ஒருங்கிசைகின்றனவென நிறுவுக.

ii) PQRS ஓர் இணைகரமெனக் காட்டுக.

iii) முக்கோணி $P\hat{S}T$ யின் பரப்பளவானது முக்கோணி QRS இன் பரப்பளவின் அரைவாசியெனக் காட்டுக.

8) வீடமைப்புத் திட்டம் ஒன்றில் வதியும் 90 குடும்பங்கள் குறித்த மாதம் ஒன்றின போது பயன்படுத்திய நீரின் அலகுகளின் எண்ணிக்கையைப் பின்வரும் மீடிறன் பரம்பல் காட்டுகின்றது.

| வகுப்பு ஆயிடை (பயன்படுத்திய நிர் அலகுகளின் எண்ணிக்கை) | 15-17 | 18 -20 | 21 -23 | 24 - 26 | 27 - 29 | 30 - 32 | 33 - 35 | 36 - 38 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் குடும்பங்களின் எண்ணிக்கை | 5 | 7 | 12 | 18 | 22 | 15 | 7 | 4 |

i) இப்பரம்பலின் ஆகார வகுப்பை எழுதுக.


ii) வகுப்பு ஆயிடை 27 -29 இன் நடுப்பெறுமானத்தை எடுத்துக்கொண்ட இடையாகக் கொண்டு குடும்பம் ஒன்று பயன்படுத்தி நீர் அலகுகளின் எண்ணிக்கைகளின் இடையைக் காண்க.

(விடையைக் கிட்டிய முழு எண்ணாகத் தருக)

iii) இப்பரம்பலின் இடைய வகுப்பை எழுதுக.

9) a) வட்டத்தின் வில் ஒன்று மையத்தில் எதிரமைக்கும் கோணம் அளவில் பரிதியின் எஞ்சிய பகுதியின் மேல் எந்த ஒரு புள்ளியிலும் எதிரமைக்கும் கோணத்தின் இருமடங்காகும் என நிறுவுக.

b) ABCD ஒரு வட்ட நாற்பக்கல். மூலைவிட்டம் BD ஆனது $A\hat{D}C$ யை இருகூறிடுகின்றது. வட்டத்தின் மையம் O ஆகும். OA, OB, OC ஆகியன வட்டத்தின் ஆரைகள்.




தரப்பட்டுள்ள வரிப்படத்தை உமது விடைத்தாளிலே பிரதி செய்து,

i) $A\hat{O}B$ - $B\hat{O}C$ எனவும்

ii) AB = BC எனவும்

iii) $A\hat{B}C + B\hat{O}C = 180^0$ எனவும் நிறுவுக.

(உமது விடைத்தாளில் வரிப்படம் வரையப்படாவிட்டால் முழுப்புள்ளிகளும் வழங்கப்படமாட்டா)

10) a)

i) a முதல் உறுப்பாகவும் d பொது வித்தியாசமாகவும் உள்ள கூட்டல் விருத்தியின் முதல் ஐந்து உறுப்புக்களையும் எழுதுக.

ii) கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் மூன்று உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை 3 ஆகவும் முதல் ஐந்து உறுப்புக்களின் கூட்டுத்தொகை 20 ஆகவும் இருப்பின், விருத்தியின் முதல் உறுப்பையும் பொது விகிதத்தையும் காண்க.

b) பெருக்கல் விருத்தி ஒன்றின் இரண்டாம் உறுப்பு 6 உம் ஐந்தாம் உறுப்பு 3/4 உம் ஆகும். அவ்விருத்தியின்

i) முதல் உறுப்பையும் பொது விகிதத்தையும் காண்க.

ii) முதல் ஆறு உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

# மாணவர்கள் மத்தியில் சிறுவர் துஷ்பிரயோக விப்புணர்வு



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 700 மில்லியன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுக்களை வலுப்படுத்தலின் கீழ் பாடசாலை மாணவர்களை சிறுவர் துஷபிரயோகம் தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள 5 பாடசாலைகளில் நடாத்தப்பட்டது.

இதைபிரதேச சிறுவர் பாதுகாப் உத்தியோகத்தர் ரஜீவன் நஜைறைப்படுத்தினார்.

கொாவத்தை அ.மி.த.க பாடசாலைலும், மெதடிஸ்த பெண்கள் பர்தர பாடசாலையிலும், செஞாமஸ் றோ.க.த.க பாடசாலைலும், வ'ல்வை மகளீர் ஷிய்ாலயத்திலும், வடஇந்து பிர் கல்லூரியிலும் சிறுவர் துபிரயோக விழிப்புணர்வு நடிதப்பட்டது. இந்த நிகழ்வில் ம் 8,9,10 மாணவர்கள் பாபற்றினர்.

# வறட்சியால் பாதிப்பிற்குள்ளான மாந்தை மக்களுக்கு நிவாரணம்

(மாந்தை)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 750 குடும்பங்களுக்கு வறட்சி நிவாரணமாக 45 இலட்சம் ரூபாய் நிதி வழங் கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் நேற்று தெரிவித்தார்.

அந்நிதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் எனப் பிரித்து பயனாளிகளின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் நிலவிய வறட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தன.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களுக்கு நிவாரணங்கள் பெற்றுத்தருமாறு பிரதேச செயலகத்தில் கோரிக்கைகள் முன்வைத்திருந்தனர். விவசாயிகளின் கோரிக்கை தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு தெளிவுபடுத்தப்பட்டது அதன் பயனாக அமைச்சு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக 45 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கியிருந்தது.

அந் நிதி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட கிராமஅலுவலர் பிரிவுகளாக பாண்டியன்குளம், கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம், சிராட்டிகுளம், மூன்று முறிப்பு, விநாயகபுரம், பூவரசங்குளம், கரும்புள்ளியான் குளம், பாலிநகர், வன்னிவிளாங்குளம், நட்டாங்கண்டல், ஒட்டறுத்தகுளம் ஆகிய 12 கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 750 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# சங்கச் சான்றோன் விருது வழங்கல் குப்பிளான் சண்முகத்திற்கு கௌரவம்



பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தால் யாழ்.குப்பிளானைச் சேர்ந்த வரும் தற்போது கரவெட்டியில் வசித்து வருபவருமாகிய பிரபல சிறுகதை எழுத்தாளர் ஐ.சண்முகன் "சங்கச் சான்றோன்" சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக கப்பட்டுள்ளார்.

அண்மையில் இதற்கான நிகழ்வு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற போது பதில் உபவேந்தர் பேராசிரியர் சாந்த கேனநாயகவினால் இவ் விருது சம்பிராதய பூர்வமாக வழங்கப்பட்டது.

இதன் போது பேராசிரியர் வ.மகேஸ்வரன்,பேராசிரியர் சிவயோகநாதன் ஆகியோரும் உடனிருந்தனர்.

வருடாவருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டு வரும் இவ்விருதை இந்த வருடம் தனது இலக்கியப் பணிகளுக்காக குப்பிளானைச் சேர்ந்த ஐ.சண்முகன் பெற்றுக் கொண்டார்.

"உதிரிகளும் கோடுகளும் கோலங்களும், "சாதாரணங்களும் அசாதாரணங்களும்" போன்ற சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்ட ஐ.சண்முகன் கவிஞராகவும், இலக்கிய விமர்சகராகவும் பல்வேறு ஆளுமைகளைக் கொண்ட ஒருவராகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது

# நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் மழை வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு



(மன்னார்)

நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையின் காரணமாக மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதியில் உள்ள பல வீடுகளினுள் வெள்ள நீர் உட்சென்றுளதாகவும் பாதிக்கப்பட்ட மகள் தெரிவித்துள்ளனர்.

நானாட்டா பிரதேச செயலாளர் பிரிகுெட்பட்ட பகுதியில் உள்ள ரதான வீதிகள் உயர்த்தப்பட்(கொங்கிரீட் வீதிகளாக மாற்றபட்டுள்ளமையினாலேயே வீடளில் உள்ள நீர் வீடுகளுக்குள் சல்வதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல வீடுகளினுள் மழை நீர் உட்சென்றுள்ளதாகவும் இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந் துள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் அன்புராஜ் லெம்பேட் தெரிவிக்கையில்

இரவு பெய்த கடும் மழையின காரணமாக நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம மக்களின் வீடுகளினுள் மழை நீர் உட்சென்றுள்ளதாகவும், இதனால் அந்த மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

நானாட்டான்- புத்தளம் பிரதான வீதி அபிவிருத்திப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றது. இதனால் வடிகாலமைப்பு பணிகளை துரிதப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

-இதனாலேயே மழை நீர் வீடுகளுக்குள் செல்லும் சந்தர்ப்பங்கள் உள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நடவடிக்கைகளை உடனடியாக நானாட்டான் பிரதேச சபை மேற்கொள்ளும். என அவர் தெரிவித்தார்

# தும்புத்தடி தாக்குதல் மல்லாகம் வாசி காயம்

ஆலயத்துக்கு வெளியே இருவருக்கு இடையில் நடைபெற்ற தகராறில் ஒருவர் தும்பு தடியால் தாக்கப்பட்டு தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் மல்லாகத்தைச் சேர்ந்த சின்னவன் அமிர்தலிங்கம் (வயது - 41) என்பவரே தலையில் காயமடைந்து வைத்தியசாலையில் இரவு 8.45 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகன் ஆலயத்தில் இரவு இடம் பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து ஆலயத்துக்கு வெளியே உரையாடிக்கொண்டிருந்த இவர் மீது இன்னொருவர் தாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையெப்பம்

# சட்டவிரோத புகலிட கோரிக்கை கைவிடுமாறு அகதிகளுக்கு அறிவிப்பு

(சென்னை)

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள், சட்டவிரோத வழிகளில் வேறும் நாடுகளுக்கு புகலிடம் பெற்றுக் கொள்ள முயற்சிக்கக் கூடாது என தமிழக கரையோரப் பாதுகாப்புப் பிரிவு மேலதிக பணிப்பாளர் நாயகம் சைலேந்திர பாபு ஆலோசனை வழங்கியுள்ளார்.

திண்டுக்கலுக்கு அருகாமையில் உள்ள அகதி முகாமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா விற்குள் பிரவேசிப்பவர்களை அந்நாட்டு அரசாங்கம் அனுமதிக்காது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.




இடைத்தரகர்கள் புகலிடக் கோரிக்கையாளர்களை நடுக்கடலில் நிர்க்கதியாக்கி செல்வதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சகல வசதிகளும் முகாம்களில் அளிக்கப்படுவதாகவும் பாரியளவில் பணத்தை செலவழித்து சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களின் பொறியில் சிக்கிவிட வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மீனவர்களை விடுவிக்காவிட்டால் தமிழகத்தில் போராட்டம் தொடரும்

## பா.ஜ.க.நிறுவுனர் ராமதாஸ் ஆவேசம்



போதைப்பொருள் கடத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஐந்து பேரையும், விசாரணைக் கைதிகளாக இலங்கை சிறையில் அடைக்கப்பட டிருக்கும் மேலும் 9 மீனவர்களையும் மீட்க அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பா.ம.க நிறுவனர் ராமதாஸ் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

மரண தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்கள் ஐவரும் அப்பாவிகள், அவர்களுக்கு அநியாயமாக மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்ற தமிழகத்தின் வாதத்தை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஐந்து மீனவர்களுக்கும் போதைப பொருள் கடத்தலில் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதை வெளிப்படையாக அறிவித்துள்ள மத்திய அரசு, இவ்விடயத்தில் நீதி சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஒப்புக்கொண்டிருக்கிறது.தண்டிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க சட்டரீதியாகவும், தூதரக ரீதியாகவும், இரு நாடுகளுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அறிவித்திருப்பது ஓரளவு நிம்மதியளிக்கிறது.

சட்டப்படி செயற்படுகிறோம் என்ற பெயரில், இந்தியாவைச் சீணடிப்பார்ப்பதற்காக நீதிமன்றங்களின் உதவியுடன் தமிழக மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வது இலங்கை ஆட்சியாளர்களின் வாடிக்கை ஆகிவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இந்திய- பாகிஸ்தான் எல்லையில் தற்கொலைத் தாக்குதலில் 55 பேர்பலி



இந்தியா - ஸ்தான் எல்லையில் அமைந்துள்ள வாகா எல்லைச் சாவடி பியில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 55 பேர் பலியாுள்ளனர்.

இதுகுறித்து கிஸ்தானின் பஞ்சாப் மாகாண பொலிஸ் மூத்த அதிகாரி ஒருவகூறியதாவது, இரு நாட்டு தேசியக் கொடிகளையும் இறக் நிகழ்ச்சியைக் கண்டுவிட்டு ஏராளமானோர் அங்கிருந்து வெயேறிக் கொண்டிருந்தனர்.


அப்போது, குள்ள நுழைவுப்பகுதி ஒன்றில் மர்மநபர் ஒருவரை பாதுகாப்படையினர் தடுத்து நிறுத்தினர். இதையடுத்து, அந்த மர்மநபர் தனதுடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததால் பாதுப்பு படையினர் 3 பேர் உட்பட 55 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்லுக்கு, பெஷாவரில் கிறிஸ்தவ தேவாலயத்தில் கடந்த ஆண்டு ீகொலைத் தாக்குதல் நடாத்தி 78 பேரைக் கொன்ற அல்-கொய்தாவ தொடர்புடைய ஜந்துல்லா என்ற அமைப்பு பொறுப்பேற்றுது.

வசிரிஸ்தாஞர்ப்-இ-அஜப் பகுதிகளில் நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக் பதிலடியாக இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக அந்த அமைப்தரிவித்துள்ளது.

# வெப்ப வாயு.வெளியேற்றத்தை உடன் கட்டுப்படுத்த வேண்டும்

## ஐ.நா. எச்சரிக்கை



புவி வெப்பமாதல், வெப்ப வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த சர்வதேசம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பெரும் பாதிப்புகளை உலக நாடுகள் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கும் விதமாக ஆய்வறிக்கை ஒன்றை பருவநிலை மாற றம் சம்பந்தமான ஐ.நா. நிபுணர குழு வெளியிட்டுள்ளது. புவி வெப்பமடைந்து வருவதற்கு மனிதச் செயலே முக்கிய காரணம் என்று இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவியின் வெப்பம் ஆபத்தை உண்டாக்கும் அளவில் அதிகரிப்பதை தடுக்க இந்த நூற்றாண்டில் உலகத்துக்குத் தேவையான மின்சாரம் கரிம வெளியேற்றம் இல்லாத உற்பத்தி முறைகளிலிருந்து பெற வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பமடைவதால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை சமாளிக்க பெரும்பான்மை நாடுகள் தயாராகவே இல்லை என இந்த அறிக்கை வெளியிடப்பட்டபோது ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். பருவநிலை மாற்றத்தை தடுப்பதற்கான புதிய உலகளாவிய ஒப்பந்தம் ஒன்றை சர்வதேச நாடுகள் விவாதித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். அடுத்த ஆண்டு இறுதிக்குள்ளாக இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# பெண்களை ஆயுதாக பயன்படுத்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிவாதிகள் அமைப்பு



பெண்களை வைத்து எதிரிகளை வீழ்த்தும் பெரிய இயக்கமாக ஐ.எஸ்.ஐ.எஸ் உருவெடுத்து வருவதாக அதிர வைக்கும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக், சிரியாவை ஆக்கிரமித்து வலுப்பெற்று வரும் கொடூரமான தீவிரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ், தங்களது அமைப்பில் பெண்களின் பங்கையும் அதிகரித்து வருகிறது.

அதாவது பெண்களை போர்களத்தில் இறக்காமல், சமையல் வேலை செய்வது, எதிரிகளை மடக்க அவர்களின் அழகையும், உடலையும் பயன்படுத்துவது, புலனாய்வு தகல்களைச் சேகரிக்க வைப்பதுஆகியவற்றிக்கு பெ்ணகளைப்பயன்படுத்தி வருகின்றது.

சமீபத்தில் மற்கு வங்கத்தில் ஹைதராத்தைச் சேர்ந்த சில பெண்கள் ுபட்டனர். இவர்கள் ஐ.எஸ்.ஐஸ் அமைப்பில் சேர முயன்று ாக் வரை சென்று வந்தவர்கள் ்வர்களை மீட்டு, உளவள ஆலேசனை வழங்கப்பட்டு விடுவிச்ப்பட்டனர்.

இவர்களிம் விசாரணை நடாத்திய பே், இவர்களிடமிருந்து பல முகிய தகவல்கள் கிடைத்தன. ணெ்களை எப்படியெல்லாம் ஐ.ஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பயாபடுத்திவருகின்றனர் என்பது பற்றிய சில திடுக்கிட வைக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து ஒரு பெண் கூறுகையில், போர்க்களத்தில் போரிடும் நடவடிக்கைகளில் பெண்களைப் பயன்படுத்துவதை ஐ.எஸ்.ஐ.எஸ் விரும்பவில்லை. நீண்ட காலம் போரிடும் நிலை ஏற்படும். அதனால் போரிடும் வீரர்களுக்கு உதவியாக நீங்கள் இருக்க வேண்டும் என்று அந்த இயக்கம் தெரிவித்தது.

மேலும், போர்க்களத்தில் உள்ள வீரர்களுக்குத் தேவையானதை நாங்கள் சமைத்துவழங்க வேண்டும் எனவும் தேவைப்பட்டால் எதிரிகளை மயக்கி வீழ்த்த உங்களது உடலையும் தியாகம் செய்ய வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாங்கள் அங்கு போரிடும் எங்களது சகோதரர்களுக்கு உதவ நினைத்துத்தான் போனோம். ஆனால் அங்கு ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் திட்டம், நோக்கம் வேறாக உள்ளது.

தற்போது எங்களைப் போல அங்கு போரிடப் போயுள்ள நமது நாட்டு சகோதரர்களின் நிலை எங்களுக்குக் கவலை தருகிறது. எனவே அவர்களும் மீட்கப்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.

# அல் கொய்தா-அரசு படை மோதல்; ஏமனில் 23 பேர் உயிரிழப்பு



எண்ணெய் வளமிக்க அரபு நாடான ஏமனில், தலைநகர் சானாவை ஷியா பிரிவு ஹவ்தி போராளிகள் கடந்த செப்ரெம்பர் மாதம் கைப்பற்றினர். மேலும் நாட்டின் மத்திய மற்றும் மேற்கு பகுதிகளையும் கைப்பற்றினர். இதற்கிடையே ஹவ்தி போராளிகளும், சன்னி பிரிவு அல் கொய்தா தீவிரவாதிகளும் தொடர்ந்து மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் மேற்கு மாகாணமான ஹோடிடாவில் உள்ள ஜபல் ராஸ் நகருக்குள் அல் கொய்தா தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடாத்தினர். அப்போது ஏமன் படை வீரர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. பல முனை தாக்குதல் நடாத்திய தீவிரவாதிகள் 4 பொலிஸ் வாகனங்களை திருடிச்சென்றனர். இந்த தாக்குதலில் 20 வீரர்கள் உள்பட 23 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# மீனவர்களை விடுவிக்காவிட்டால் பிஎவிளைவுகள் ஏற்படும்

## சீமான் சீற்றம்



போதைபொருள் கடத்திய குற்றச்சாட்டில், கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மரணதண்டனை விதிக்கப்படுள்ள இந்திய மீனவர்கள் ஐவரையும் குற்றமற்றவர்கள் என விடுலை செய்ய வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமன் தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று அறிவித்து விடுதலை செய்யாவிட்டால் தேவையற்ற பின்விளைவுகள் ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சி சார்பில் குமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாள் விழா பொதுக் கூட்டம் மேல்புறம் சந்திப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்ததாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வடக்கில் ஆசிரியர் இடமாற்றம் புதிய நடைமுறைகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் 2015 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள அதிபர்கள், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நேற்று மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் விசேட கூட்டம் நடைபெற்றது.

இதில் ஏழுவருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்குவதென்றும், வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கும் 2015ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் இடமாற்றம் வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வன்னிப்பிரதேச பாடசாலைகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு கஷ்டப்பிரதேச சேவை செய்யாத, வெளிமாவட்ட சேவை செய்யாத யாழ்ப்பாணம், வலிகாமம் வலயத்தில் உள்ள 48 வயதிற்குக் குறைந்த வயதினையுடைய ஆண் ஆசிரியர்களுக்கும் 43 வயதிற்குக் குறைந்த வயதினையுடைய பெண் ஆசிரியர்களுக்கும் வன்னிப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் ஏற்கனவே நடைபெற்ற இடமாற்றங்களில் ஏற்பட்ட இடர்பாடுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரனும், பிரசாரச் செயலாளர் ஏ.மடுத்தீனும் எடுத்துரைத்துள்ளனர்.

இது தொடர்பில் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தெரிவுகள் நடைபெறும் என்றும், யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயங்களில் இருந்து அவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் எனவும் கல்வி அமைச்சுச் செயலாளரால் எடுத்துரைக்கப்பட்டது. அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் சேவையாற்ற வேண்டிய காலங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை.

இதைவிட தொண்டர் ஆசிரியர் நியமனம் கிடைத்தவர்கள் தமது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைக்காலத்தை நிறைவு செய்திருந்தால் இடமாற்றத்திற்கு தகுதியுடையவர்கள் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

இதைவிட பத்துவருட நிபந்தனை நியமனம் கிடைக்கப்பெற்றவர்களும், எட்டு வருட நிபந்தனை நியமனம் கிடைக்கப்பெற்றவர்களும் இடமாற்றத்திற்குத் தகுதியுள்ளவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் வன்னிப் பிரதேச பாடசால்லைகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு புதிய ஆசிரிய நியமனங்களை வழங்கி அவற்றை நிவர்த்தி செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நாவற்குழியில்...

தாம் வெடிக்கச் செய்தனர் என்றும், துப்பாக்கி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

மீட்கப்பட்ட துப்பாக்கி ரி-56 ரகத்தை சேர்ந்தது என்பதுடன் அதன் பின்பகுதி கடுமையாக சேதமடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மாகாணசபை...

ஆனால் அவையின் நியதிச் சட்டங்களை உருவாக்க அதிலிருந்து 30 பேரைக் கொண்டு வந்து 10 நாட்களில் உருவாக்க முடியாத நிலைதான் பரிதாபத்திற்குரியது.

முதலமைச்சர் காரியாலயம் எப்போதும் திறந்திருக்க வேண்டும். மக்கள் சந்திப்புக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அதை பூட்டிப்போட்டு காவல் போட்டுவிட்டு இருக்கக்கூடாது. இதனால் நிறைய பிரச்சினை ஏற்படப்போகின்றது.

மாகாண சபை உறுப்பினர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டால் கதைக்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும்.

எமது தொலைபேசிக்கு பதில் கிடைப்பதில்லை. செயலாளருக்கு எடுத்தால் சரி சொல்கிறேன் என்பார். அவ்வளவுதான்.

எம்மை நம்பி வாக்களித்த இந்த மக்களின் பிரதிநிதிகள் நாங்கள். எமது கடிதத்தை பார்க்கவோ, எமது தொலைபேசிக்கு பதிலளிக்கவோ முடியாவிட்டால் வாக்களித்த எமது மக்களின் நிலையை யோசித்து பார்க்கவேண்டும்.

முதலமைச்சர் காரியாலயம் வினைத்திறனாக இருக்கவேண்டும். அவரது தனிப்பட்ட செயலாளர் சுந்தரலிங்கத்திடம் கேட்டால் சொல்வார் ஐயாவிடம் கேட்டுச் சொல்வதாக. ஆனால் இன்று வரை பதில் இல்லை. அவருக்கு தேவையற்ற வேதனம். இவ்வாறு நடந்துகொண்டால் நாம் யாரிடம் சொல்வது.

நாம் எதுவும் செய்யாது, அவர்களும் மக்களுக்கு எதையும் செய்யாது, செய்யவிடுகிறார்கள் இல்லை எனச் சொல்வதால் பாதிப்பது எமது மக்களே. பதவி முக்கியமல்ல. அதை திறம்பட செயலாற்ற வேண்டும்.

முதலமைச்சர் முன்னிலையில் 4 வீடுகள் வழங்கினால் நல்ல விடயம். ஆனால் அங்கு பாதிக்கப்பட்டவர்கள் இருக்கும்போது மிகப் பணக்காரரான ஒரு சம்மாட்டிக்கு கொடுத்திருக்கிறார்கள். விபரம் எல்லாம் என்னிடம் இருக்கிறது. இதுகூட 28 ஆம் திகதி நான் மாகாணசபையில் பேசிய பின்புதான் வழங்கப்பட்டது.

முதலமைச்சருக்கான அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். அப்படி பயன்படுத்தாவிட்டால் பதவியில் இருப்பதால் பிரயோசனம் இல்லை. செய்யக்கூடிய விடயத்தை செய்யாமல் இருப்பதால் எல்லோரும் இப்படித்தான் முதலமைச்சர் என போகிறார்கள்.

முதலமைச்சரை அகற்றும் நோக்கம் அங்கு யாருக்கும் இல்லை. நாங்கள் முழுமையாக முதலமைச்சரை ஆதரிக்கிறோம். ஆனால் முதலமைச்சர் நலன்சார்ந்த வேலைகளை செய்யவேண்டும்.

அரசாங்க காசை தூக்கி கொடுத்துவிட்டு செய்து விட்டோம் எனச் சொல்லக்கூடாது.

முதலமைச்சருக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்கு பதில் இல்லை. ஆனால் முல்லையிலிருந்து ஜனாதிபதிக்கு அனுப்பி ஒரு பெண்ணின் கடிதத்திற்கு 7 நாட்களில் பதில் வந்துள்ளது. இது மக்களுக்கு மட்டுமல்ல, எனக்கும்தான் தெரியும் என தெரிவித்தார் அன்ரனி ஜெயநாதன்.

மேலும் வடமாகாண சபையிலே நான் பேசும் போது பதில் சொல்லமுடியாத விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் வெளியில் வந்து நின்று கொண்டு கதை அளப்பது நல்லதல்ல.

எங்களைப் பற்றிய பொய்ப் பிரசாரம் செய்வதை அவர் இன்றுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் மிகப் பயங்கரமான ஆட்கள். முல்லைத்தீவில் வந்து கேட்டுப் பாருங்கள். எனக்கு உடம்பில் வீரம் இருக்கு. பொய்ப்பிரசாரம் செய்வதை நிறுத்தாவிட்டால் சரியான பதில் கூறவேண்டிய நிலை வரும். யாழ்ப்பாணத்தில் மேடை போட்டு பேசவேண்டிய நிலை விரைவில் வரும்.

மரம் நாட்ட வந்தால் மரம் நடவேண்டும். அதை விடுத்து சும்மா எம்முடன் சொறியக்கூடாது. இறுதி வரை மக்களுடன் மக்களாக இரத்தக் கறைகளுக்கு மத்தியில் நின்று மக்களின் அவலங்களை பார்த்தவன் நான்.

நான் கிறிஸ்தவன். உண்மைகளைத்தான் பேசுவேன். நான் அவையில் உண்மையைப் பேசும் போது என்னிடம் கூற முடியாமல் நாரந்தனையில் போய் நின்று கொண்டு கொக்கரிக்கிறார்கள்.

எனது கருத்துக்களை எல்லாரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். நாங்கள் விலைபோபவர்கள் அல்ல. அவர்களின் பிள்ளைகளை மாதத்திற்கு 3 இலட்சம் ரூபா செலவு செய்து படிப்பிக்கிறார்கள். இதைபற்றி எல்லாம் நாங்கள் கதைத்தால் நாறிப்போகும்.

அதுமட்டுமல்ல, முதலமைச்சரால் செய்யக்கூடிய பல வேலைகள் ஏன் செய்யப்படவில்லை. கூட்டுறவு அமைச்சருக்கு கூட்டுறவை கட்டுப்படுத்த முடியாதா? கூட்டுறவு நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாதா? மாகாண சபைக்கு வருகிறோம். 1.30 மணிக்கு சாப்பிடுகிறோம். போகிறோம். ஏன் நாள் முழுவதும் இருக்கமுடியாதா? இந்த ஜனநாயகப் பண்பு மாறவேண்டும்.

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியில் சொல்லுங்கள். ஏன் உங்களால் இதைச் செய்யமுடியாது. மாகாண சபையினால் செய்யமுடியாத விடயங்கள் குறித்து சுட்டிக்காட்டுவது தவறா? எமது ஆட்சிக்காலமான 5 ஆண்டுகள் கழிந்த பின்னர் மண்ணை தட்டிவிட்டு முதலமைச்சர் கொழும்பு சென்று விடுவார்.

கூட்டமைப்பு இங்குதான் இருக்கவேண்டும். வடக்கு மாகாண சபையிலே மிக நம்பிக்கையுடன் மக்கள் இருந்தனர். இன்று அந்த நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளது. நாம் ஒன்றுசேர்ந்து நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார்.(இ,25)

# வத்திக்கான் அதிகாரிகள் குழு கொழும்பு விஜயம்

(கொழும்பு)

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் பாப்பரசரின் விஜயம் தொடர்பிலான ஏற்பாடுகள் குறித்து கலந்தாலோசிப்பதற்காக பாப்பரசரின் பிரதிநிதிகளாக நெறிமுறை அதிகாரிகள் மூவர் வத்திக்கானிலிருந்து கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

அந்த அதிகாரிகள், தேவாலய நிர்வாகிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

## புலிகள்...

தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளிக்கவே பிரித்தானிய விரும்புகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முழு அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதே பிரித்தானியாவின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல், மனித உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் ஒன்றை எட்டுதல் போன்றவற்றின் ஊடாக முழு அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மேலும் மூன்று...

மீட்புப் பணிகளில் இராணுவத்தினர். கடற்படையினர் மற்றும் விமானப் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கொஸ்லாந்தை பகுதியில் மழையுடன் கூடிய வானிலை நிலவிய போதும் மீட்புப் பணிகளுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

நேற்று மீட்கப்பட்ட சடலங்களில் 9 மாதக் குழந்தையின் சடலமும் காணப்பட்டதாக மத்திய பாதுகாப்பு படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை. ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கேகாலை, இரத்தினபுரி, கண்டி, பதுளை, நுவரெலியா, மாத்தளை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இன்று பிற்பகல் 5.30 வரை மண்சரிவு அபாய எச்சரிக்கை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மண்சரிவு...

இந்த மண்சரிவு அனர்த்தத்தில் 63 வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மண் சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் தாய், தந்தை இருவரையும் இழந்த மூன்று பிள்ளைகளும், தாயை மட்டும் இழந்த நான்கு பிள்ளைகளும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மீரியாபெத்த மண் சரிவு காரணமாக இடம்பெயர்ந்த 296 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், அதனை அண்டிய பிரதேசங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் காரணமாக வெளியேற்றப்பட்ட 1755 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் மண்சரிவு மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக 7575 பேர் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மீரியாபெத்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநபர்கள் உதவிகளை வழங்குவதில் சிக்கல் நிலைமைகள் காணப்படுவதாகவும் இதன் காரணமாகவே முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை பார்வையிட அனுமதி வழங்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உறவினர்கள், படையினர், அரசியல்வாதிகள் ஊடக நிறுவனங்கள் உள்ளிட்ட தரப்பினர் மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க அனுமதிக்கப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மண்சரிவு அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட உயிர்ச் சேத விபரங்களை வெளியிடும் அதிகாரம் பொலிஸாருக்குக் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ நிறுவனமே உயிர்ச் சேத விபரங்களை உத்தியோகபூர்வமாக வெளியிட அதிகாரம் உடைய நிறுவனம் என அவர் தெரிவித்துள்ளார். இடைக்கிடை பொலிஸாரும் உயிர்ச் சேத விபரங்களை வெளியிட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## வங்காள விரி...

மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் வடக்கு, கிழக்கு கரையோரப் பிரதேசங்களில் காலை வேளைகளிலும் மழை காணப்படலாம்.

இந்த தாழமுக்க பிரதேசமானது நேற்று மாலை 6.00 மணி முதல் ஆரம்பமாகியதையடுத்து 24 மணித்தியாலத்தில் மேலும் வலுவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு அது வலுவடைந்து சூறாவளியாக உருவாகும் சந்தர்ப்பத்தில் அந்த சூறாவளிக்கு இலங்கையினால் பிரேரிக்கப்பட்ட 'பிரியா' எனும் பெயர் சூட்டப்படும்.

கடல் பிராந்தியங்களுக்காக வானிலை முன்னறிவிப்பும் இப்போது விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கிழக்கு கடல் பகுதிகளில் இடையிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும். ஏனைய கடல் பிராந்தியங்களில்கூட மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படலாம்.

வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள தாழமுக்க பிரதேசம் காரணமாக யாழ்ப்பாணம் முதல் திருகோணமலை, மட்டக்களப்பு ஊடான காலி வரையான கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகம் திடீரென அதிகரிக்கலாம்.

இதனால் இக்குறிப்பிடப்பட்ட கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

# மாகாண சபையின் வீடமைப்பு உதவி முல்லைத்தீவில் பாரபட்சம்

## முதலமைச்சர் மீது கண்டனக் கணை

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண சபையூடாக முல்லைத்தீவில் வழங்கப்பட்ட வீடமைப்புக்கான உதவித் திட்டத்தில் பாராபட்சம் காட்டப்பட்டதாக கண்டனக் குரல்கள் கிளம்பியுள்ளன.

கள்ளப்பாட்டைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவருக்கு உள்ளூராட்சி அமைச்சு ஊடாக வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட நான்கு பேருக்கு கடந்த 29 ஆம் திகதி முதலமைச்சரால் வீட்டுத்திட்டத்துக்கான முதற்கட்ட நிதி வழங்கப்பட்டது.

இதில் முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த ஒருவரும் பயனாளியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு முல்லைத்தீவில் இரண்டு கரை வலைகள், டாடா ரக வாகனம் என்பன சொந்தமாக உள்ளன என்றும், தற்போது 10 இலட்சம் ரூபா பெறுமதியான கரைவலையை மன்னார் பகுதியில் இவர் வாங்கியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

குறித்த நபர் சுனாமியின் போது மனைவியை இழந்தவர் என்றும், இவரது பிள்ளைகள் வளர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வறுமைக் கோட்டுக்கு கீழ்ப்பட்டவர்கள் என்ற பட்டியலில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட, தொழில் வாய்ப்பற்ற, வறிய குடும்பங்கள் முல்லைத்தீவில் பல உள்ளன என்றும், வடக்கு மாகாண உறுப்பினர் ஒருவரது சிபார்சின் அடிப்படையில் செல்வந்தர் ஒருவருக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கள்ளப்பாட்டைச் சேர்ந்த பலர் குற்றம் சாட்டுகின்றனர். இந்த விவகாரம் குறித்து கள்ளப்பாடு கிராம அலுவலரிடம் கேட்ட போது,

குறித்த நபர் கடற்றொழில் செய்தாலும், அவருக்கு வீடு ஒன்று தேவை. வீட்டுத் திட்டத்தின் ஊடாக பலருக்கு வசதி படைத்தவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் வீடுகள் வழங்கப்படுகின்றன. எனவே அதுகுறித்து பெரிதுபடுத்த வேண்டும் என்ற அவசியமில்லை என்றார்.

ஆனாலும், போரால் பாதிக்கப்பட்ட, வறுமைக்கோட்டுக்குட்பட்ட பல குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை என்றும், மிகமோசமாக நிலையில் உள்ளவர்களைத் தெரிவுசெய்யாது, சலுகை அடிப்படையில் மாகாண சபை உறுப்பினர் ஒருவரது ஆதரவில் இவ்வாறான முறைகேடு இடம்பெற்றிருக்கிறது என்று பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த விடயம் குறித்து பெரிதுபடுத்தவேண்டாம் என சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர் மற்றைய உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மு.காங்கிரஸ் - கூட்டமைப்பு கொழும்பில் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று கொழும்பில் நடைபெறும் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள், இரு கட்சிகளும் எதிர் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இணைந்து பணியாற்றுவது போன்ற விடயங்கள் குறித்து பேசுவதற்காகவே இந்தச் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தாலும் மு.கா. தலைவருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக குறிப்பிட்ட திகதியில் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் இன்று பேச்சு நடைபெறவுள்ளது. அது மட்டுமின்றி தொடர்ச்சியான பேச்சுக்கள் ஊடாக இரு கட்சிகளுக்குமிடையில் நல்லுறவைப் பேணி எதிர்கால நடவடிக்கைகளுக்காக இணைந்து செயலாற்றுவதற்கான முடிவுகள் எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கல்வி, கலாசாரத் துறைகளில் யோசனைகள் முன்வைக்கலாம்

கல்வி, கலாசாரம், தொல்பொருளியல் ஆய்வு உட்பட பல துறைகளில் திட்ட யோசனைகளை சமர்ப்பிக்குமாறு இலங்கை-இந்திய மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொருளாதார, தொழில்நுட்பம், மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பு மூலமாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை வளர்க்கும் நோக்குடன் 1998 இல் இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமாக ஏற்படுத்தப்பட்டதே இந்திய-இலங்கை மன்றம், இந்திய - இலங்கை மன்றம் தற்போது கல்வி, கலாசாரம், தொல்பொருளியல், விவசாய ஆராய்ச்சி, தகவல் தொழில்நுட்பம், அபிவிருத்தி கற்கை மற்றும் பால்நிலை கற்கை போன்ற பிரிவுகளில் திட்ட யோசனைகளை கோரியுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களில் ஆராய்ச்சித் திட்டங்களுக்காகவும், கல்வி செயற்பாடுகளுக்காகவும் திட்ட யோசனைகளை சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலைகளில் அஞ்சலி

பதுளை மாவட்டம் கொஸ்லந்த மீரியபெத்த பிரதேசத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரனர்த்தத்தால் உயிரிழந்த எமது உறவுகளுக்காக நேற்று நாட்டில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திபெற வேண்மென்று நேற்றுக் காலை 9.00 மணிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் ஐந்து நிமிடங்கள் அமைதிப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதனை ஏற்றுக்கொண்டு தமிழ்ப் பாடசாலைகளில் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன.

# மண்சரிவால் பாதித்த மக்களுக்கு குடாநாட்டு மக்கள் உதவலாம்

பதுளை கொஸ்லந்த பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க விரும்புவர்கள் எதிர்வரும் வாரத்தில் வழங்கலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பதுளையில் ஏற்பட்ட அனர்த்தம் பால்மா, மற்றும் துணி வகைகள், உணவுப் பொருட்கள் அனைத்தும் தற்போது, அரச மற்றும் அரசுடன் சார்ந்த நிறுவனங்களினால் வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன், பால்மா மற்றும் துணிவகைகள் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதாகவும், அனர்த்திற்கான உதவி செய்வது தொடர்பில் அவசரம் காட்ட தேவையில்லை என்றும் பதுளை மாவட்ட அரசாங்க அதிபர் கூறியிருக்கின்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க விரும்புபவர்கள் எதிர்வரும் வாரத்தில், அதாவது, அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் சீராக்கப்பட்ட பின்னர் உதவ முன்வருமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

# சட்டவிரோத மதுபான விற்பனை; 65 ஆயிரம் ரூபா தண்டம்

கடந்த ஒக்ரோபர் மாதம் யாழ். மதுவரித்திணைக்களத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோத மதுபான நடவடிக்கைளுக்கு எதிராக யாழ். மதுவரித் திணைக்களத்தினால் 24 வழக்குகள் யாழ். மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு அவர்களுக்கு நீதிமன்றத்தினால் 65 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டிருப்பதாக யாழ். மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளர்.

# எமது கோரிக்கைகளை வென்றெடுக்க ஜனாதிபதி மகிந்தவை வெற்றி பெறச் செய்வோம்

### *யாழில் ஜெகத் புஸ்பகுமார தெரிவிப்பு*



திவிநெகும திணைக்களம் உருவாகுவதற்கு காரணமாக இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றி பெறச் செய்வதன் மூலமே எமது கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

இதற்கு திவிநெகும திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் மேல் மாகாணசபை உறுப்பினரும், திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான ஜெகத் புஸ்பகுமார.

யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி (திவிநெகும) அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் செந்தூரன் தலைமையில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் புஸ்பகுமார மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு தடைகளுக்கு மத்தியில் இந்த திவிநெகும சட்ட மூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றில் நிறைவேற்றியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல்வேறு கட்சிகள் இச்சட்ட மூலத்திற்கு எதிராக நீதிமன்றம் சென்றதை அனைவரும் அறிவீர்கள்.

இந்த அரசாங்கத்தின் ஊடாக கடந்த காலங்களில் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தோம். ஜனாதிபதி மகிந்த ஒரு தாயைப் போல இருந்து இந்த 'திவிநெகும' என்ற குழந்தையை உருவாக்கப் பாடுபட்டார். எனவே வறிய மக்களுக்கு உதவும் இப்பாரிய செயற்றிட்டத்தில் அனைவரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வின் போது வாழ்வின் எழுச்சி சங்க உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகவும் அவர்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப் பட்டது.

இந்நிகழ்வில் யாழ்மாவட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள்,: யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் க.மகேஸ்வரன், உதவிப் பணிப்பாளர் ஆர். ரகுநாதன், அகில இலங்கை வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சங்கத்தின் பொருளாளர் அன்வர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ.26)

# மாணவனைக் காணவில்லை

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 16 வயது மாணவன் ஒருவனைக் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜே.ஜெயகெனடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும தெரிவிக்கையில், கடந்த புதன் கிழமை மாலை சூரன் போர் பார்ப்பதற்காக வவுனியா, புளியங்குளம், பனிக்கநீராவி பகுதியில் இருந்து வவுனியா நகருக்கு வந்த சந்திரகுமார் சுகிர்தன் (வயது-16) என்ற மாணவன் இதுவரை வீடு திரும்பவில்லை என மாணவனின் தாயார் சந்திரகுமார் ஜெயசித்திரா 'தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மலையக அனர்த்தம் இந்திய உதவி 50 இலட்சம் ரூபா

(கொழும்பு)

மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கொஸ்லந்த பிரதேச மக்களின் புனர்வாழ்வுக்கு உடனடியாக 50 இலட்சம் இலங்கை ரூபாவை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது.

அத்துடன் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது வாழ்வை கட்டமைக்க இலங்கை அரசாங்கத்துடன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகமும், கண்டியில் உள்ள துணைத் தூதரகமும் நெருக்கமாகப் பணியாற்றும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

மண்சரிவு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்றைய தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், வெளிவிவகார அமைச்சரும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.